Registered as a NewsPaper.

பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 14 | ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 31 | (29.06.2006) | வியாழக்கிழமை | இதழ் 271

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# கற்பிட்டிக் கடலில் மோதல்

# கடற்படை படகு மூழ்கடிப்பு

## 7 கடற்படையினர் பலி

மன்னார்—

மன்னார்-கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற்புலிகளின் தாக்குதலில் கடற்படையினரின் நீரூந்து விசைப் படகொன்று மூழ்கடிக்கப்பட்டதுடன் - 7 கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் மற்றொரு கடற்படைப்படகு பலத்த சேதமடைந்ததுடன் மூன்று கடற்படையினர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 11.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தகவல் வெளியிடுகையில்:-

மன்னார் மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு கடற்பரப்பில் வழமையான கடற்பயிற்சிகளில் ஈடுபட்டுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பில் படுகொலை!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் மூன்று தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.

மயிலம்பாவெளியிலுள்ள தங்களது வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த இளைஞர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு-திருகோணமலை வீதியிலுள்ள மயிலம்பாவெளி இராணுவ முகாமிலிருந்து 250 மீற்றர் தொலைவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மூன்று இளைஞர்களையும் சுட்டுக்கொன்றனர். மட்டக்களப்பு நகரிலிருந்து வடபகுதியில் 7 கிலோ மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் நடந்தது.

9 எம்.எம்.பிஸ்டலே இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இளைஞர்களை சுட்டுக் கொன்ற பின்னர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கிளைமோர் தாக்குதல் மூன்று தமிழ் பொதுமக்கள் பலி!

மன்னார்—

மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கொக்குப்படையான் பகுதியில் மணல் ஏற்றிக்கொண்டு வந்த டிரக்டர் மீது இராணுவத்தின் ஆழஊடுருவித் தாக்கும் படையணி நடத்திய கிளைமோர் தாக்குதலில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுப்பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கல்லாற்றில் மணல் ஏற்றிக்கொண்டு கொக்குப்படையானுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது - முள்ளிக்குளம் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆழஊடுருவித்தாக்கும் படையணியினரால் நடத்தப்பட்ட இந்த கிளைமோர் தாக்குதலில் யாக்கோபு (வயது51), சுதாகர்(வயது22), செபமாலை சுரேஸ் (வயது29) ஆகியோர் உயிரிழந்தனர்.

இவர்களின் சடலங்கள் சிலாவத்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (மோ)

## குண்டுப்புரளியால் திணறும் தென்னிலங்கை மக்கள்!

கொழும்பு—

அநாமதேய தொலைபேசி மூலமான குண்டுப்புரளியால் தென்னிலங்கையில் பல இடங்களிலும் பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டதுடன் - பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது.

கொழும்பு நகரில் உள்ள பாடசாலையில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தொலைபேசி அழைப்பையடுத்து - நேற்றுக்காலை 8 மணிக்கு முன்னரே பெற்றோர் தமது பிள்ளைகளை கூட்டிச் சென்றனர்.

களுத்துறை வைத்தியசாலையின் பிரேத அறையை தயார்படுத்துமாறு தொலைபேசி அழைப்பு கிடைத்ததையடுத்து களுத்துறை பண்டாரநாயக்கா வித்தியாலயத்தில் குண்டு இருப்பதாக வதந்தி பரவியது. இதனால்அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை அறிந்து பாடசாலைக்கு வந்த பெற்றோர் தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். இதனால் களுத்துறை பண்டாரநாயக்கா வித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவு முற்றாக செயலிழந்து காணப்பட்டது.

இதேவேளை காலி, கண்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளிலும் குண்டு இருப்பதாக வெளியான தகவலையடுத்து அங்கு கல்வி பயிலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் சிப்பாய் காயம்

## ஓமந்தையில் சிப்பாய் காயம்

வவுனியா

வவுனியா- ஓமந்தை இராணுவ காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 12.35 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இதையடுத்து படையினரும் பதில் தாக்குதலை நடத்திய தாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - காளிகோவில் விதியில் காவலரணில் இருந்த படையினர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 7.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றதாக படையினர் தெரிவித்தனர்.

## கொமாண்டோ தளபதி ஓய்வுபெற விண்ணப்பம்

கொழும்பு

இலங்கை இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்ச பதவியில் இருந்து விலகிச் செல்வதற்கு இராணுவத்தளபதியிடம் அனுமதி கோரியுள்ளார்.

இவரது பதவி விலகலை பாதுகாப்பு அதிகாரிகள் எந்த விசாரணையும் இன்றி ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும், தற்போதைய நிலைமை காரணமாக சில உயர் மட்ட படைத்தளபதிகள் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும் - இதனால் நாட்டில் பாதுகாப்பு பலவீனம் அடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

## வெலி ஓயா தாக்குதலில் இராணுவச்சிப்பாய் பலி

கொழும்பு

வெலிஓயா - கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமின் முன்னரங்க காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற படையினர் மீது ஆர்.பீ.ஜி மற்றும் சிறியரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத் தரப்பு தெரிவித்தது.

இந்தச் சம்பத்தில் நான்கு படை யினர் படுகாயமடைந்ததுடன் இவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

# பரமியின் சடலத்தைபெற 9 மணிநேரம் காத்திருப்பு

### கொழும்பு பத்திரிகை தகவல்

கொழும்பு


லெப்.ஜெனரல் பரமி குலதுங்கவின் சடலத்தை அவரது குடும்பத்தினர் வைத்தியசாலையிலிருந்து பெறுவதற்கு 9மணி நேரம் காத்திருக்க நேரிட்டதாகவும் - இராணுவ அதிகாரிகளோ, அமைச்சர்களோ இதற்கு உதவி வழங்கவில்லை என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பரமி குலதுங்கவின் உடலைப் பெறுவதற்காக காலை 8.30மணி முதல் மாலை 5மணிவரை வைத்தியசாலையில் காத்திருந்தபோதும் அவரது குடும்பத்தினர் உட்காருவதற்கு ஒரு கதிரையைக்கூட நிர்வாகம் ஏற்பாடு செய்து தரவில்லை.

பிரதி அமைச்சரான மேர்வின் சில்வா மட்டுமே அந்தக் குடும்பத்தினர் வைத்தியசாலையில் காத்திருந்த 9மணி நேரத்தில் வந்து சென்றார்.

மேலும் இராணுவத் தளபதிகளோ, மூத்த அமைச்சர்களோ வைத்தியசாலைக்கு வந்து ஆறுதல் கூறவோ, உதவவோ (10 ஆம் பக்கம் பார்க்க).



தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட லெப்.ஜெனரல் பரமி குலதுங்கவுக்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் அளித்த இறுதி அணிவகுப்பு மரியாதை. (படம்:- ஏபி)




# கானாவுக்கு ஒரு கௌரவம் உண்டு



டோட்மண்ட்

றொனால்டோவின் அற்புதமான அந்த ஐந்தாவது நிமிட கோல் FIFA வரலாற்றில் சாதனை என்பது ஆச்சரியமல்ல. ஆச்சரியங்களை சாதாரணமான விடயங்களாக்குவதே அவரது பாணி.

அந்த கோலைப் போடும்போது றொனால்டோவின் கால்கள் கானா கோல்காப்பு வீரருக்குக் காட்டிய வித்தை அற்புதமானது.

ஆகவே, இந்த கோல் உட்பட மொத்தம் மூன்று கோல்கள் போட்டு கானாவை வெற்றிகொண்டு பிரேசில் காலிறுதி ஆட்டத்திற்குள் நுழைகிறது. சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் பிரான்ஸைச் சந்திக்கப் போகின்றது.

ஆபிரிக்க கண்டத்தின் கானா, உலகின் முதல்தர அணியுடன் சோடை போகாமல் விளையாடியது. தனது கௌரவத்தைக் காப்பாற்றும் வண்ணம் விளையாடிய பெருமையுடன் தாயகம் திரும்புகிறது.

என்ன இருந்தாலும் 3:0 என்ற கோல் கணக்கில் பிரேசில் வென்றாலும், பிரேசிலின் அட்ரியானோ அடித்த இரண்டாவது கோல் முறையற்றது என்று எல்லோரும் கூறுகிறார்கள். ஆனால், ஸ்லோவாக்கியா மத்தியஸ்தர் லூபொஸ் மிச்சேல் மட்டும் அது கோல்தான் என்று பிடிவாதமாக இருக்கிறார்.

கானா எவ்வளவோ முயன்றும் கோல் காணும் விளிம்புக்கு வந்தும் ஒரு கோலையாவது போடமுடியாமற்போனது பெரும் துரதிஷ்டமாகும். குறிப்பாக இடைவேளையை அண்டிய சந்தர்ப்பத்தில் மென்ஷாவின் HEADER ஒன்று தெய்வாதீனமாக பிரேசில் கோல்காப்பு வீரர் டிடாவின் காலில் பட்டு எகிறிப் போனமையைக் குறிப்பிடலாம்.

எது எப்படியோ முடிவு தெரிந்துவிட்டது. இறுதியாக 84 ஆவது நிமிடத்தில் ஸேறொபோட்டோ போட்ட கோலுடன் பிரேசில் நியாயபூர்வமான வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் அதி கூடுதலாக 25 FIFA ஆட்டங்களில் ஆடிய சாதனைக்குரியவர் ஜேர்மன் அணித்தலைவராக விளங்கிய லொதர் மத்தியூஸ். பிரேசில் அணியைப் பொறுத்தவரை இது அணித்தலைவர் காபுவின் பத்தொன்பதாவது ஆட்டம். இது ஒரு சாதனையாகும்.

இன்னொரு சாதனை அட்ரியானோ அடித்த பிரேசில் அணியின் இரண்டாவது கோல் உலகக்கிண்ண வரலாற்றில் 200 ஆவது கோலாகும். இந்த இலக்கையடைந்த முதல் நாடு பிரேசில்.

2006 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஒரு அணியில் அதி கூடுதலாக ஆறு வீரர்களே கோல் போட்டிருக்கிறார்கள். ஸெறொபோட்டோ பிரேசில் சார்பில் ஏழாவது வீரராக கோல் போட்டு சாதனைப் பட்டியலில் பெயர் பெறுகிறார்.


உலகக் கிண்ணப் போட்டிகளில் கன்னிப் பிரவேசம் செய்த கானா, ஏலவே ஐந்து முறை கிண்ணம் வென்ற பிரேசில் இருவரும் சந்திப்பது கூட ஒரு விஷேடம்தான். இந்தச் சந்திப்பில் இரு அணிகளுமே ரசிகர்களின் பாராட்டைப்பெறும் வண்ணம் விளையாடியதுதான் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

விளையாட்டில் வெற்றி தோல்விக்கும் அப்பால் வேறு பல விடயங்கள் இருக்கின்றன என்று இந்த ஆட்டம் எடுத்துக் காட்டியது. நன்றி பிரேசில், நன்றி கானா.

ஆபிரிக்க கண்டத்தில உதைபந்தாட்ட வளம் நன்றாக விளைந்து கிடக்கிறது என்பது ஒனறும்புதிய விடயம் அல்ல. 2010 இல் அவர்களது கண்டத்திலேயே உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும்போது அந்தக் கிண்ணம் அவர்களின் கண்டத்தில் குடியருக்கச் செய்ய இப்பொழுது முதல் எல்லா விதமான முயற்சியையும் மேற்கொள்ளுவார்கள் ஆபிரிக்கக் கண்டத்திற்கு இப்பொழுதே எம் வாழ்த்துக்கள்.







# கனி தரும் மரம் டேவிட் பெக்காம்



மியூனிச்

முதலாம் திகதி இங்கிலாந்து காலிறுதிப் போட்டியில் போர்த்துக்கலைச் சந்திக்கவுள்ள வேளையில், இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் ரெரி புச்சர் தற்போதைய அணித்தலைவர் டேவிட் பெக்காம் மீது கண்டனக்கணைகளை அள்ளி வீசுகிறார்.

பெக்காம் திறமையாக விளையாடவில்லை என்பது அவரது வாதம். ஈக்வடோர் அணிக்கு எதிரான இரண்டாம் சுற்றுப் போட்டியின் ஆட்டத்தில் பெக்காம் விளையாடியிருக்கக் கூடாது என்பது இவர் வாதம்.

முன்வரிசை வீரர் வெயின் ரூணிக்கு உதவும் வகையில் பெக்காமால் விளையாட முடியவில்லை என்றும், எனவே ரூணியுடன் இணைந்தாடும் வல்லமை பெற்ற ஒருவரை களமிறக்க வேண்டும் என்று இவர் கூறுகிறார்.

இந்த விடயங்கள் பற்றி பெக்காமிடம் நேரடியாக கலந்துரையாடி விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன் என்கிறார். மேலும் இவர் ஈக்வடோருக்கு எதிரான இங்கிலாந்தின் ஆட்டம் தனக்கு அதிர்ச்சி அளித்ததாக இவர் கூறுகின்றார். அவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் அதிர்ச்சி தான்.

ஏனெனில், மிகப் பலமான அணியை ஈக்வடோர் கடுமையாக எதிர்த்து நின்றது. இவ்வளவு ஒரு போராட்டத்தை இங்கிலாந்தே எதிர்பார்த்திருக்காது.

எனவே, ஈக்வடோரின் திறமை தான் இங்கு முனைப்பாகத் தெரிந்ததே ஒழிய பெக்காமின் திறமையின்மை அல்ல. இதில் மிக முக்கியமானதொரு விடயம் என்னவென்றால், ஈக்வடோரை வெளியேற்ற இங்கிலாந்து பெற்ற ஒரு கோல் பெக்காம் அடித்த FIFA என்பதாகும். அதுவே அந்த ஆட்டத்தின் மிக முக்கியமான நிகழ்வாகவும் அமைந்தது.

இந்த நிலையில் பெக்காம் மீதான குறைந்த சாட்டுதான் எந்தளவு எடுபடும் என்பது தெரியவில்லை. பெக்காம் போன்ற கண்ணியமானதொரு வீரர் மைதானத்தில் இல்லையென்றால் ஆட்டம் சோபிக்காது என்பது உண்மை.

# றொனால்டோவா - சிடேனா





ஹனோவர்

ஐரோப்பியக் கண்டத்தில் பிரான்ஸும் ஸ்பானியாகவும் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றாலும் FIFA கிண்ணம் பெறும் போட்டியில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்க முடியாதல்லவா?

இந்த ஆட்டத்திலும் ஸ்பானியா முதல் கோலை 28 ஆவது நிமிடத்தில் போட்டதும் பிரான்ஸிய ரசிகர்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்திருக்கும். சமதையான ஸ்பானியாவை இன்னும் 2 கோல் போட்டு வெல்ல பிரான்ஸால் முடியுமா என்ற நியாய பூர்வமாக அச்சம் ஏற்பட்டிருக்கலாம்.

1998 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணம் வென்ற பிரான்ஸ் தங்களுக்கு எதிரான முதலாவது கோலை உதறித்தள்ளி விட்டு திட்டமிட்ட மிகவேகமான ஆட்டப்பாணியொன்றை அறிமுகப்படுத்தவே, ஸ்பானிய அணியின் பல்வேறு வியூகங்களும் சிதறுண்டுபோயின.

தியரி ஹென்றி, சினெடின் சிடேன் போன்ற உதைபந்தாட்ட மன்னர்களைக் கொண்ட பிரான்ஸ் ஜப்பானுக்கு எதிராக பிரேசில் வீறுகொண்டு எழுந்ததுபோல எழுந்தது.

இதன் விளைவு பிரான்ஸ் மூன்று கோல்களைப் போட்டு ஸ்பெயின் அணியின் அடுத்தகட்ட கனவை கனவாகவே மாற்றி கண்ணீர்விட்டு அழவைத்துவிட்டது.

பிரான்ஸ் அடுத்துச் சந்திக்கப்போவது பிரேசில் அணியை. 1998 இல் பிரேசிலைத் தோற்கடித்தே பிரான்ஸ் தம்மண்ணில் வைத்து உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது.



இப்பொழுது இறுதிப்போட்டிக்கு முன்னதாக காலிறுதிப் போட்டியில் இரு அணிகளும் சந்திக்கப்போகின்றன. இது FIFA வரலாற்றில் 704 ஆவது ஆட்டமாக அமையப்போகிறது. 700 ஆவது ஆட்டமாக அமைந்தது பிரான்ஸ் - ஸ்பெயின் ஆட்டம்.

பிரான்ஸ் முதல் சுற்றில் சுவிற்சர்லாந்துடன் சமன் செய்து, தென்கொரியாவுடன் 1:1 என்று சமன் செய்து டோகோ அணியை 2:0 என்று வென்று மொத்தம் ஐந்து புள்ளிகளுடன் இரண்டாவது சுற்றுக்கு இரண்டாம் இடம்பெற்றே நுழைந்தது.

தொடர்ந்து விலகல் முறை ஆட்டங்கள் என்ற வகையில் ஸ்பானியாவை மிகக் கௌரவமான கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து, காலிறுதிப் போட்டிகளுக்குள் நுழைந்தது.

இங்கு சந்திக்கப்போவது 1998 இல் இரண்டாம் இடம் பெற்ற, 2002 இல் சம்பியன் பட்டம் வென்ற, 2006 இல் சம்பியன் பட்டம் வெல்லும் என எதிர்பார்க்கப்படும் பிரேசில் அணியாகும்.

பிரேசிலுக்கு, பிரான்ஸுடன் தீர்த்துக்கொள்ளவேண்டிய கணக்கு ஒன்று உண்டு. எனவே 2006 FIFA உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஜுலை 1 ஆம் திகதி மறக்கமுடியாத நாளாக எல்லோருக்கும் அமையக்கூடும்.

# லெப்.ஜெனரல் குலதுங்க கொலை சந்தேகத்தின் பேரில் 22 பேர் கைது!

கொழும்பு —

லெப் ஜெனரல் பரமி குலதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்காக சந்தேகத்தின் பேரில் இது வரை 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் பதிவு செய்யப்பட்டிருக்கும் நபரும் கைது செய்யப்பட்டவர்களுள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளை சில மாதங்களுக்கு முன்னர் விற்பனை செய்து விட்டதாகவும், அது தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல் திட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த நபரிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் உதவியாக அமையலாம் என பொலிஸார் நம்புகின்றனர்.

விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இந்த நபர் கூறுவது உண்மையா, இல்லையா என்பது குறித்து பொலிஸாரால் உடனடியாக உறுதி செய்ய முடியாதுள்ளது.

மோட்டார் சைக்கிளை பதிவு செய்துள்ள நபரிடமிருந்து அதனை விலை கொடுத்து வாங்கிய நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

சம்பவ தினம் லெப்.ஜெனரல் குலதுங்க தனது வீட்டிலிருந்து வழமையான நேரத்தை விட முன்கூட்டியே வெளியேறியுள்ளார். இதனை குண்டுதாரி அறிந்து வைத்துள்ளதாக இராணுவ விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் மாற்று வழிகளில் பயணித்து வந்துள்ளார். அதனையும் தற்கொலைதாரி அறிந்து வைத்துள்ளார் என்றும் இராணுவ விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

லெப்.ஜெனரல் பரமி குலதுங்கவை கொலை செய்தது போன்று மேலும் பல தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகவும் – அவர்களின் இலக்கு வைக்கப்படுவோர் பட்டியலில் உயரதிகாரிகளின் பெயர்கள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு ஐந்து வருடங்களில் இடமாற்றம்!

கொழும்பு —

தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களும் 5 வருடத்துக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்படும் நிரந்தர செயற்திட்டத்தை விரைவாக செயற்படுத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய பாடசாலைகளின் இடமாற்றங்கள் தொடர்பான தேசியக் கொள்கை உரிய முறையில் செயற்படுத்தப்படாததால், குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் நீண்டகாலமாக தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். இதனால் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

இந்த நிலையில் தேசிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களது இடமாற்றக் கொள்கையை விரைவாக செயற்படுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்து வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றும் அதிகாரம் மாகாண சபைகள் கல்வியமைச்சின் மூலமாக முறையாக செயற்படுத்தப்படவில்லை என கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார். (தே)

# பரமி குலதுங்க கொலை இராணுவத்துக்கு பேரிழப்பு

## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு



கொழும்பு —

லெப்.ஜெனரல் பரமி குலதுங்கவின் இழப்பு இராணுவத்துக்கு பேரிழப்பு என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவின் படுகொலை இராணுவத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். நாங்கள் சமாதான பாதையில் பயணிக்கின்ற நேரத்தில் விடுதலைப் புலிகள் கொலைகளை புரிந்து வருகின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாத்து அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் கைகோர்த்து வருகின்ற நிலையில் விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறுவதன் மூலம் சர்வதேச சமூகத்தையும் மதிக்காமல் செயற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயலை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று மக்கள் கருதுகின்றனர். அரசாங்கத்தின் பொறுமை எல்லை மீறியுள்ளது.

பயங்கரவாதத்தை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைவது கட்டாயமாகும். இதற்கான காலம் தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நான்கு குடும்பஸ்தர்களை திருமலையில் காணவில்லை

திருமலை —

கால்நடைகளைத் தேடியும், விறகு வெட்டவும் காட்டுப்பகுதிக்குச் சென்ற அப்பாவிப் பொதுமக்கள் நால்வர் திருகோணமலையில் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர்.

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிவெட்டி பாரதிபுரத்தில் தமது கால்நடைகளை காணவில்லை என்று ஆதியம்மன் கேணி காட்டுப்பகுதிக்குச் சென்ற மூன்று விவசாயிகளை கடந்த திங்கட்கிழமை முதல் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிவெட்டி – பாரதிபுரத்தை சேர்ந்தவர்களான இரண்டு பிள்ளைகளின் தந்தையான நல்லதம்பி ஞானேஸ்வரன் (வயது 46), நான்கு பிள்ளைகளின் தந்தையான பத்தக்குட்டி திரவியராஜா (வயது 40), கிளிவெட்டி லிங்கபுரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான அம்பலவாணபிள்ளை சதாசிவம் (வயது 45) ஆகியோரே காணாமல் போனவர்களாவர்.

தமது சொந்தக் கிராமத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்த இவர்கள், வேறு இடம் ஒன்றில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தனர்.

இந்த இடம்பெயர்வின் போது காணாமற்போனதமது கால்நடைகளைத் தேடி கடந்த திங்கட்கிழமை பாரதிபுரத்துக்கு வந்த இவர்கள் அவற்றைத் தேடி ஆதியம்மன் கேணி காட்டுப் பகுதிக்குச் சென்றபோதே காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான பெரியகுளம் பகுதியில் சுண்ணாம்புச் சூளை வைத்து நடத்திவரும் அன்ரனி ஜோசப் (வயது 51) என்பவர் கடந்த 25 ஆம் திகதி அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குள் விறகு வெட்டச் சென்ற போது காணாமல் போனார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக திருகோணமலை மாவட்ட பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் காணாமல் போன அப்பாவி பொதுமக்கள் உடனடியாக கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# அனுராதபுர ரயில் நிலையத்தில் வெடிகுண்டு கவசத்தால் பதற்றம்

கொழும்பு —

அனுராதபுரம் ரயில்வேதிணைக்கள விடுதி வளாகத்தில் காணப்பட்ட வெடிகுண்டு கவசம் காரணமாக ரயில் பணியாளர்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

விடுதியின் பின்புறத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வெடிகுண்டு கவசம் ஒன்றைக் கவனித்த பணியாளர் ஒருவர் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியிட்டதையத்தே இந்தப் பதற்றம் நிலவியது.

இதனையத்து ரயில் பணியாளர்கள் நாலாபுறமும் சிதறியோடினர். அந்த இடத்துக்கு விரைந்த கண்ணிவெடி செயலிழக்கும் பிரிவினரும், பொலிஸாரும் வெடிகுண்டு கவசம் என்பதை உறுதிசெய்ததும் பதற்றம் தணிந்தது.

# வன்முறையை கட்டுப்படுத்த முடியாவிடின் நாடாளுமன்றத்தைக் கலையுங்கள்!

## அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை



கொழும்பு —

நாட்டில் தற்போது தீவிரமடைந்து செல்லுகின்ற வன்முறைப் போக்கை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாது போனால் நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் பொதுத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

இலங்கையின்அரசியல் வரலாற்றில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற இக்கட்டான நிலையை நாம் ஒருபோதும் எதிர்நோக்கவில்லையென கட்சியின் தேசிய ஏற்பட்டுக்குழு செயலாளர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில்தற்போது ஏற்பட்டிருக்கின்ற அபாயகரமான நிலையில் வன்முறைகள், மனிதப் படுகொலைகள், குண்டு வெடிப்புக்கள் போன்ற யுத்த செயற்பாடுகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த வன்முறைச் சூழலுக்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளுமே பதில் சொல்ல வேண்டும்.

இதுவரை காலமும் நாட்டை ஆட்சி புரிந்த அனைத்துக் கட்சிகளும் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள இனவாதக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தன.

2002 ஆம் ஆண்டில் இரண்டு பிரதான கட்சிகளும் அதிகாரப்பகிர்வு தொடர்பாக இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டபோதும், இலங்கையில் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டபோதும் சமாதான செயற்பாட்டுக்கான உரிய முறை இல்லை.

நாட்டில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாதுபோயின் குறைந்தது சமாதான ஒப்பந்தத்தையாவது பாதுகாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகளுக்கு உதவிய இரண்டு சிங்களவர்கள் கைது!


கொழும்பு —

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு ஆயுதங்களைக் கொண்டு சென்றதாக நீர்கொழும்பைச் சேர்ந்த இரண்டு சிங்களப் படகு உரிமையாளர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களின் படகுகளும் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

பமுனுகமவில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட 5 பேர் மற்றும் அவர்களுக்கு உதவியதாகக் கூறப்படும் சிங்கள மீனவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய இவ்விருவர் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக இரகசியப் பொலிஸ் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கமைய இரகசியப் பிரிவு பொலிஸ் குழு நேற்றுமுன்தினம் கொழும்புக்குச் சென்று இந்த மீனவர்களைக் கைதுசெய்துள்ளதுடன், அவர்களின் படகுகளையும் கைப்பற்றியுள்ளது.



# அவதானமாக இருக்குமாறு சுற்றுலா பயணிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு —

இலங்கையில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையேயான போர் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதால், தமது நாட்டு சுற்றுலாப் பயணிகளை மிகவும் அவதானத்துடன் பயணம் மேற்கொள்ளுமாறு பொதுநலவாய அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 23 வருட கால இன மோதல்களில் எந்தவொரு வெளிநாட்டுப் பிரஜையையும் இலக்கு வைத்து தாக்குதல்கள் இடம்பெறாத போதிலும் பிரிட்டன் மற்றும் ஏனைய வெளிநாட்டவர்கள் தாக்குதலுக்கு இலக்காகாமல் பயணங்களை மேற்கொள்வது நல்லது. அண்மைக் காலத்தில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் வன்முறை காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார வளர்ச்சி ஏற்பட மோதல் நிறுத்தப்பட வேண்டும்

## உலகவங்கி தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் இனமோதல்களைக் களைந்து நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொண்டால் வறுமையை முற்றாக ஒழிக்கலாமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கி கடந்த திங்கட்கிழமை தென்னாசியாவில் பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

இலங்கையில் வறுமையை முற்றாக ஒழிப்பதற்கு பொருளாதார வளர்ச்சியில் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இந்து சமுத்திரத்தில் இலங்கை சிறந்த தீவாக இருக்க முடியும்.

இன மோதல்களால் கடந்த முப்பது வருடங்களில் பொருளாதாரத்தில் இரண்டு மூன்று வீத வளர்ச்சியில் பெரும் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இனமோதல் முரண்பாடுகளை களைந்து பொருளாதார அபிவிருத்தியிலும் அது தொடர்பான பாதுகாப்பு செலவுகளிலும் அக்கறை செலுத்தி செயற்படுவது முக்கியம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை அரசாங்கத்தின் நயவஞ்சகத்தை சர்வதேசம் புரிந்துகொள்ளும்!

## நம்பிக்கை தெரிவிக்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி—

இலங்கை அரசாங்கத்தின் நயவஞ்சகச் செயலை இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். அந்த நாள் வந்தே தீரும் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் "தமிழ்முரசு" நாளேட்டுக்கு அவர் வழங் கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் சிங்களப் படைகள் முன்னைய காலம் போல குழந்தைகள், பெண்கள் என்ற பாரபட்சம் பாராது பொதுமக்களைக் கொன்றழிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் உலகெங்கும் வாழும் தமிழ்மக்களிடம் குறிப்பாகத் தமிழ்நாட்டில் வாழும் தமிழ்மக்களிடம் அனுதாப உணர்வு, எழுச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தனிப்பட்ட நலன்கள் அடிப்படையில் பார்த்தால் விடுதலைப் புலிகளுக்கும் தி.மு.க. அரசுக்கும் உறவுகள் நெருக்கமாக இருக்காது. ஆனால், மக்கள் நலனை வலுவாகக் கட்டியெழுப்பும்போது நிச்சயமாக நாங்கள் நட்புக் கரம் நீட்டுவோம் எனத் தெரிவித்தார்.

அமைதிப் பேச்சை நடத்த இந்தியா செல்லவும் தயார் என விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதைப் பற்றிக் கேட்டபோது -

இந்தியா விடுதலைப் புலிகளுக்கு தடை விதித்திருக்கும் பட்சத்தில் நாங்கள் அங்கு செல்ல வாய்ப்பில்லை. ஆனால், நிலைமைகள் மாறும் வாய்ப்புள்ளது என்றார் அவர்.

சிங்கள அரசுக்கு ஆதரவளிப்பதை இந்தியா நிறுத்தவேண்டும். தங்களது அடிப்படை உரிமைக்காகப் போராடும் தமிழர்களின் கோரிக்கையை தார்மீக ரீதியாக இந்தியா ஆதரிக்க முடியாது எனச் சொல்லமுடியாது. பல சந்தர்ப்பங்களில் இந்தியா உதவியுள்ளது. குறிப்பாக பங்களாதேஷ் போராட்டத்தை ஆதரித்து உதவியுமுள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவை வைத்துக்கொண்டு தான் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதுபோல சிங்களப் பத்திரிகைகள் அறிக்கைகளை விடுத்துக்கொண்டிருக்கின்றன.

இந்திய அரசாங்கம் எங்கள் விடுதலைப் போராட்டத்தை ஏற்று அங்கீகரிப்பதுடன், எங்களுக்கு அதன் தார்மீக ஆதரவையும் வழங்கவேண்டும். இலங்கை அரசின் அட்டூழியங்களை கண்டிக்கவேண்டும். இதுவே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், தமிழ் மக்களின் விருப்பமுமாகும்.

இலங்கை அரசாங்கத்தின் நயவஞ்சகச் செயலை இந்தியா உள்ளிட்ட அனைத்துலக சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும். அந்த நாள் வந்தே தீரும். ஈழத் தமிழ்மக்களுக்கு கூடிய விரைவில் நல்ல வழி பிறக்கும் என சு.ப. தமிழ்ச்செல்வன் உறுதியோடு தெரிவித்தார்.

## முருகன் - நளினி தொடர்ந்து உண்ணாவிரதம்!

வேலூர்—

வேலூர் சிறையில் முருகன் - நளினி தம்பதியினர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் வேலூர் சிறையில் தண்டனை அனுபவித்துவரும் முருகன் - நளினி தம்பதியினாின் மகள் அரித்திரா (வயது 15) இலங்கையில் தனது பாட்டி வீட்டில் தங்கிப் படித்து வருகிறார்.

இந்த நிலையில், தமிழகத்தில் தங்கிப் படிக்க மாணவர் விஸாவுக்கு விண்ணப்பித்த அரித்திராவுக்கு விஸா வழங்க இலங்கை அரசு மறுத்து வருகிறது.

தமது மகளுக்கு விஸா வழங்கக் கோரி கடந்த 14 ஆம் திகதி முதல் வேலூர் சிறையில் உண்ணாவிரதமிருந்த முருகன் - நளினி தம்பதியினர், அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க 17 ஆம் திகதி அதனை நிறுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த திங்கள் முதல் அவர்கள் மீளவும் உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தமது மகளுக்கு விஸா வழங்கப்படும்வரை உண்ணாவிரதத்தைத் தொடரப்போவதாக அவர்கள் தெரிவித்தார்.

# ஈழத் தமிழர்கள் பாதுகாப்பை வலியுறுத்தி 8 ஆம் திகதி சென்னையில் பெரும் பேரணி

## ஜெயலலிதாவும் பூரண ஆதரவு என்கிறார் திருமாவளவன்

சென்னை —

ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி, அனைத்துக் கட்சிகளும் பங்குபற்றும் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 8 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளதாகவும் - இதற்கு அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா ஆதரவளித்து, வாழ்த்தும் தெரிவித்துள்ளார் என விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக் குறித்த அனைத்துக்கட்சி கலந்தாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்றது. விடுதலைச் சிறுத்தைகள் முன்னின்று நடத்திய இந்தக் கூட்டத்தில் - உலகத் தமிழர் பேரமைப்பு, ஐக்கிய ஜனதாதளம், கைவினைஞர் முன்னேற்றக் கழகம், தமிழர்களம் உட்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஈழத் தமிழர்களின் நிலைகுறித்தும், அவர்களின் பாதுகாப்புக் குறித்தும் ஆலோசித்தனர்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் திருமாவளவன் கூறியதாவது -

ஈழத்தமிழர் பாதுகாப்புக் குறித்த இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தை ஆளும் கட்சி தலைமையேற்று நடத்த வேண்டும் எனக் கோரியிருந்தோம். அந்தக் கட்சி தலைமை ஏற்காததால் விடுதலைச் சிறுத்தைகள் முன்னின்று இந்தக் கூட்டத்தை நடத்தியது. கட்சி நலனுக்கு அப்பாற்பாட்டு ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் அனைத்துக் கட்சிகளும் ஈடுபட வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பான நிலை ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்தி அடுத்த மாதம் 8 ஆம் திகதி சென்னையில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும். எந்த இடத்தில் நடத்துவது என்பது குறித்து இன்னும் முடிவுசெய்யவில்லை.

பொலிஸாரிடம் முறையான அனுமதி பெற்று, திட்டமிட்டபடி பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

தமிழ்த் தேசிய உணர்வுள்ளவர்களும், ஈழத்தமிழர் நலனில் அக்கறையுள்ளவர்களும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவேண்டும்.

இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுதங்கள் வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஈழத் தமிழர்களின் நிலையை அறியும் வகையில் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழக சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவை மத்திய அரசு நியமிக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்கள் அனைத்துக் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

விடுதலைச் சிறுத்தைகள் முன்னின்று நடத்தும் இந்த நிகழ்வுகளுக்கு அ.தி.மு.க, ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா எமக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் - அதிகமான பணிகள் இருப்பதால் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் முயற்சி வெற்றிபெற வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.



ஈழத் தமிழர் நலனில் ஜெயலலிதா எப்போதும் ஆதரவுக் கருத்துக்களைத் தான் கொண்டிருக்கிறார். அதனை பல முறை வெளிப்படுத்தியும் இருக்கிறார் என திருமாவளவன் தெரிவித்தார்.

# அனுசரணைப் பணியிலிருந்து வெளியேறப் போவதில்லை!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையின் சமாதான அனுசரணைப் பணியிலிருந்து நோர்வே வெளியேறும் என்ற பேச்சுக்கே இடமில்லை. எமது பொறுமை ஒருவகையில் எல்லை கடந்ததாகும். எனினும் பொதுமக்களே பொறுமையிழந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

நோர்வே வானொலிச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதேவேளை, இலங்கையில் வன்முறைகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளபோதிலும் நோர்வேயின் கண்காணிப்பு மற்றும் சமாதானப் பணிகள் தொடரும் என்று நோர்வே கூறியுள்ளது.

# கொழும்பில் சில ஊடகங்கள் புலிகளின் உளவாளிகளாம்!

## சாடுகிறார் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு —

கொழும்பிலிருந்து வெளியாகும் இரண்டு ஆங்கில ஊடகங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவாளிகளாகச் செயற்படுகின்றன என பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சண்டேலீடர் மற்றும் மோர்னிங்லீடர் ஆகிய ஊடகங்கள் சந்திரா பெர்னாண்டோவை பேட்டி கண்டன.

பேட்டி முடிந்த பின்னர் தேசிய பாதுகாப்பு, பொலிஸாரின் ஊழல்கள் மற்றும் அம்பாந்தோட்டை வழக்கு ஆகியவை குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சந்திரா பெர்னாண்டோ - அம்பாந் தோட்டை வழக்கில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளத்தான் இந்தப் பேட்டியை நீங்கள் எடுக்கிறீர்கள். தேசியப் பாதுகாப்புக் குறித்து கேள்வி எழுப்பி என்னை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூலம் பதவி விலகச் செய்ய நினைக்கிறீர்கள். நீங்கள் புலிகளின் உளவாளிகள் என்று சாடினார்.

# எயார் லங்கா பயணிகள் மீது திருச்சியில் கடும் சோதனை!

திருச்சி —

இலங்கையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து கொழும்பிலிருந்து திருச்சிக்கு வரும் விமானங்களில் பயணிகள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர்மூளும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகத் தமிழர்கள் வருகின்றனர்.

இலங்கையிலிருந்து படகுகள் மூலம் இராமேஸ்வரம் வரும் இவர்கள், பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் அங்கிருந்து பல்வேறு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கொழும்பிலிருந்து திருச்சிக்கு நராளாந்தம் விமானசேவையை எயார் லங்காநிறுவனம் நடத்தி வருகிறது. இந்த விமானங்களில் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் போலி சான்றிதழ்கள் மூலம் ஊடுருவ வாய்ப்பிருப்பதாக இந்திய அரசுக்கு உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து வரும் விமானங்களையும் கடும் சோதனையிடுமாறு அனைத்து விமான நிலைய குடிவரவு குடியகல்வுத்துறைக்கும் அரசு வலியுறுத்தியுள்ளது.

அதனடிப்படையில் கொழும்பிலிருந்து திருச்சிக்கு வரும் விமானப் பயணிகள், கடும் சோதனைக்குப் பின்னரேயே அனுமதிக்கப்படுகின்றனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில் -

இலங்கையிலிருந்து வரும் விமானங்களில் பயணிகள் வழக்கமாகவே கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவது வழக்கம். அதுவும் தற்போது அங்கு பதற்றமான சூழ்நிலை இருப்பதால் சான்றிதழ்கள், கடவுச்சீட்டுகள் முழுமையாகச் சோதனை செய்யப்படுகின்றன.

சந்தேகப்படும் படியான நபர்கள் வந்தால் அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவர் எனத் தெரிவித்தனர்.

மனோகரா
யாழ்ப்பாணம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா மற்றும் பலர் நடிப்பில்
திருப்பாச்சி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்
கரண் சாதனா மற்றும் பலர் நடித்த

கொக்கி
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

# கணினிக் கல்வி நிறுவனம் மாணவர்களிடம் பண மோசடி

யாழ்ப்பாணம்—

யாழ். நகரப் பகுதியில் இயங்கி வரும் கணினிக் கல்வி நிறுவன மொன்று மாணவர்களிடமிருந்து பெருந் தொகைப்பணத்தைப் பெற்றுக் கொண்டு மோசடியில் ஈடுபட்டமை தெரிய வந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது -

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உயர் பட்டப் படிப்புகளையும் வேலைவாய்ப்பையும் பெற்றுத் தருவதாக கவர்ச்சிகரமான விளம் பரங்களைச் செய்து - மாணவர்களிடமிருந்து பல லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு, அனுமதியைப் பெற்றுக் கொடுக்காமல், பணத்தையும் மீளளிக்காது மாணவர்களை ஏமாற்றி மோசடியில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சில மாணவர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து இந்தக் கணினிக் கல்வி நிறுவன முகாமையாளர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 21 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிவான் விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டு மெனவும் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்தக் கணினிக் கல்வி நிறுவனமானது - ஊடகங்கள் மூலம் கவர்ச்சிகரமான விளம்பரங்களைச் செய்து மாணவர்களை உள்ளீர்த்து, பணத்தை வாங்கிக் கொண்டு மோசடியில் ஈடுபட்டு வந்தது.

இதனால் ஏராளமான மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதோடு, மன விரக்தியுமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த கல்வியியலாளர் ஒருவர் - பெற்றோர் தமது பிள்ளைகளைத் தனியார் கல்வி நிறுவனங்களில் இணைக்கும்போது மிகுந்த கவனத்துடனும், பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்பது குறித்தும் மிகத் தெளிவாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# செயற்படாத நிலையில் பெருமளவு சனசமூக நிலையங்கள்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டிலுள்ள சனசமூக நிலையங்களில் 75 வீதமானவை நிர்வாகச் சீர்கேடு மற்றும் நிதிப் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் இயங்காமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சனசமூக நிலையங்கள் இயங்காத காரணத்தால் கல்வி, சுகாதார, விளையாட்டு போன்ற செயற்பாடுகளை கிராம மட்டத்தில் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அநேகமான சனசமூக நிலையங்களில் நிர்வாக சீர்கேடுகள் தலைதூக்கிய அதேவேளை - ஏனையவற்றில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான நிதிவளம் போதுமானதாக இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இயங்காமலுள்ள சனசமூக நிலையங்களை இயங்க வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை இவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மேற்கொள்ளவில்லையெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

# இளைஞரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்—

வேலைக்குச் சென்ற இளைஞர் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி அல்வாய் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுரேஷ் (வயது -18) என்பவரே காணாமல் போயுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி வீட்டிலிருந்து பருத்தித்துறை நகரசபைக்கு வேலைக்குச் சென்ற இந்த இளைஞர் மீண்டும் வீடு திரும்பவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இந்து தர்மாசிரியர் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்—

கடந்த ஹர்த்தால் தினத்தன்று இடம்பெற்ற இந்து தர்மாசிரியர் தெரிவு பரீட்சையை மீண்டும் நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பரீட்சை கடந்த 17,24,25 ஆகிய திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றன. எனினும் 24 ஆம் திகதி நடைபெற்ற பரீட்சை தினத்தன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதன் காரணமாக போக்குவரத்து சேவைகள் இடம்பெறாமையால் பரீட்சார்த்திகள் பலர் பரீட்சைக்கு தோற்ற முடியவில்லை.எனினும் அன்றைய தினம் பரீட்சைக்கு சமூகமளித்தவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

ஆனால், முதல் நாளன்று இடம்பெற்ற பரீட்சையின் இரு பாடங்களையும் புதிதாக நடத்துமாறும் பரீட்சைக்குத் தோற்றத் தவறிய பரீட்சார்த்திகள் ஒப்பமிட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

# க.பொ.த.சாதாரண பரீட்சை விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்—

இந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங் களை ஜுலை மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பான விண்ணப்பங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முதலாம், இரண்டாம் தடவைகளாக பாடசாலை மூலம் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சைக்கான கட்டணம் அறவிடப் படமாட்டாது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின் பரீட்சை தொடர்பான விண்ணப்பத்துடன் ஒரு பாடத்துக்கு 25 ரூபா, இரண்டு பாடங்களுக்கு 30 ரூபா, 3 பாடங்களுக்கு 35 ரூபா, 4 பாடங்களுக்கு 40 ரூபா, 5 பாடங்களுக்கு 55 ரூபா, 6 தொடக்கம் 10 பாடங்களுக்கு 70 ரூபா என கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

# மத்தியஸ்தர் சபை விரைவில் இயங்கும்

உடுவில்—

வலி.தெற்கு பிரதேச செயலக பிரிவில் அமைக்கப்பட்டுள்ள மத்தியஸ்தர் சபை விரைவில் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் தலைவீர் எஸ்.தம்பித்துரை தெரிவித்தார்.

பொது மக்கள் தமக்கிடையே ஏற்படுகின்ற சிறு பிணக்குகளை விபரமாக எழுதி, 5 ரூபா முத்திரை ஒட்டி, கையொப்பமிட்டு - சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள பண்டிதர் மாணிக்க தியாகராசா வீதியிலுள்ள தனலக்குமி வாசா என்ற முகவரியில் அமைந்துள்ள மத்தியஸ்தர் சபை காரியாலயத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம். அல்லது சபை உறுப்பினர்களூடாகவும் அனுப்பலாம் என அவர் தெரிவித்தார். (101)

# வருடாந்த திருநாள்

நெடுந்தீவு—

நெடுந்தீவு மத்தி புனித தோமையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நற்கருணை எழுந்தேற்றமும் மறுநாள் திங்கட்கிழமை காலை திருநாள் திருப்பலியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் தொடர்ந்து கொடியிறக்கமும் இடம் பெறும்.

# பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

இந்து கலாசார திணைக்களம் அறநெறிப் பாடாசலை தோறும் நடத்திவரும் பண்ணிசை வகுப்புக்கள் வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனவே, புதிதாக வகுப்புக்களில் சேர விரும்புவோர் - மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை அதிபரிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

# அரச நாடக விழா ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்—

கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலாமன்றம் -பொம்மலாட்ட கலாமன்றத்துடன் இணைந்து 2006 ஆம் ஆண்டு அரச நாடக விழாவை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நாடக விழாவில் பங்குபற்றுவதற்கான நாடகங்களின் பிரதிகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நர்த்தன நாடகம் மற்றும் பொம்மலாட்டம் கலாமன்றம், 8 ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

சிறுவர் நாடகம் (சுருக்கம்), பெரியோர் நாடகம் (விரிவு), பெரியோர் நாடகம் (சுருக்கம்) ஆகிய மூன்று பிரிவுகளில் இந்த நாடகப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# விவசாய பீட மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விரிவுரைகள் நேற்று முதல் ஆரம்பமாகவிருந்த போதிலும் தற்போது அவை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக பதிவாளர் பி. கந்தசாமி அறிவித்தார்.

மறு அறிவித்தல் கிடைக்கும் வரை இந்த விரிவுரைகள் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், மாணவர்கள் இதை கவனத்தில் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

# 128 விவசாய போதனாசிரியர்கள் வடக்கு - கிழக்கில் நியமனம்!

யாழ்ப்பாணம்—

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றவென 128 விவசாயப் போதனாசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா வழங்கினார்.

இதுவரை 828 வெளிக்கள உத்தியோகத்தர்கள் வட - கிழக்கில் இந்த வருடம் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய விவசாயப் போதனாசிரியர்கள் வட-கிழக்கில் எட்டு மாவட்டங்களிலுள்ள பின்தங்கிய பகுதிகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் - விவசாய கால்நடை, நீர்ப்பாசன காணி மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் ஏ.ஆர்.எம் மஃறூப், மேலதிக செயலாளர் கே.பரமலிங்கம், மாகாண காணி ஆணையாளர் ஆர்.ரவீந்திரன், மாகாண விவசாயப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம், விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிராமிய பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்தப் புதிய விவசாய போதனாசிரியர்கள் சேவையாற்ற வேண்டுமென இந்த நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

# மணிவாசகர் குருபூசை

நெல்லியடி—

அல்வாய் சாமணந்தறை அருள் மிகு ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை காலை 8 மணிக்கு விசேட பூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவும், திருவாதவூரடிகள் புராண படிப்பும், இந்த ஆலய திருத்தொண்டர் சபையால் நடத்தப்படும்.

# நெடுந்தீவு சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு



நெடுந்தீவு—

நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று காலை 6 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறவுள்ளதுடன், நாளை நண்பகல் 12 மணிமுதல் சனிக்கிழமை பகல் 12 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்துவதிலும் ஏனைய கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் பக்தர்கள் இன, மத, வேறுபாடுகளின்றி கலந்துகொள்ளலாமென கும்பாபிஷேக சபையினர் அறிவித்துள்ளனர்.

2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து தூபி அபிஷேகம், மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. மாலை சுவாமி வீதியுலாவும் வரவுள்ளார்.

இதேவேளை, இந்த ஆலயம் கடந்த 1968, 1974 ஆம் ஆண்டுகளிலும் 1990 ஆம் ஆண்டிலும் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டாலும் இதுவரை காலமும் இந்தக் கோவிலில் வருடாந்த உற்சவங்கள் இடம்பெறாதிருந்தது. தற்போதே மீண்டும் இந்த ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# 12 இலட்சம் ரூபா பணம் யாழ்.நகரில் கொள்ளை!

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் - கஸ்தூரியார் வீதியில் நேற்றுக்காலை 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா துணிகரமான முறையில் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள வர்த்தகர் ஒருவர் நேற்றைய தினம் வங்கியில் வைப்பிலிடுவதற்காக மேற்குறித்த தொகையை எடுத்துச் சென்றார்.

ஆனால் தற்போது குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பால் வங்கி இயங்காததை அடுத்து அவர் மீண்டும் வர்த்தக நிலையத்தை நோக்கி சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

இவர் கஸ்தூரியார் வீதியிலுள்ள தேவாலயத்துக்கு முன் வந்து கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் திடீரென இவரிடமிருந்த பணப்பொதியைப் பறித்தெடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : பி.விதுர்சிகன்
முகவரி : வேலணை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ---------------

முகவரி : ---------------

பிறந்த ஆண்டு: ---------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------
பெற்றோர் ஒப்பம்



# கனகாம்பிகைக்குளம் பாடசாலை புதிய கட்டட திறப்புவிழா நிகழ்வு



கிளிநொச்சி—

கிளிநொச்சி கனகாம்பிகைக் குள பாடசாலையில் அமைக்கப் பெற்ற புதிய கட்டடத்துக்கான திறப்புவிழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் இ.மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மாணவர் அமைப்பைச் சேர்ந்த வரதன் ஏற்றினார்.

புதிய கட்டடத்தை யுனிசெப் நிறுவனத்தின் கிளிநொச்சி பிரதிநிதி பெனிபுறூன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வகுப்பறைகளை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் கா.பத்மநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.அரியரட்ணம், கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து கருத்துரைகளும் இடம்பெற்றன.

# நான்காம் கட்ட ஈழப்போர் குறுகிய காலமே நடைபெறும்

## தளபதி குட்டி தெரிவிப்பு

வட்டக்கச்சி—

முன்னர் நடந்த போர்களைப் போல் அல்லாது குறுகிய காலப் போராக, வித்தியாசமான முறையில் நான்காம் கட்ட ஈழப்போர் அமையுமென சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் வடபோர்முனைத் தளபதிகளில் ஒருவரான குட்டி தெரிவித்தார்.

வட்டக்கச்சியிப் பிரதேச மக்கள் படையினர் - களமுனை போராளிகளுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

எந்த ஒரு அரசாங்கமும் எமது உரிமையைத் தரப்போவதில்லை. எமது உரிமையை நாம்தான் பெற வேண்டும். எமது உரிமையை நாம் இலகுவாகப் பெற்றுவிடமுடியாது.

நான்காம் கட்ட ஈழப்போரில் நாம் யாழ்ப்பாணத்தை மீட்க வேண்டும். அதற்கான எமது பணிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இதேபோன்று இராணுவமும் ஆனையிறவைப் பிடிப்பதற்கு தயார் நிலையில் உள்ளது. இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

கடைசிக் கட்ட ஈழப்போர் இதுவாகும். யாழ்ப்பாணத்தை நாம் கைப்பற்றுவதால் எதிரி தனது இடத்துக்குப் போய் விடுவான். எமது இலக்கு யாழ்ப்பாணம் தான். அதனை மீட்பதற்கு அனைவரும் புலிப்படையில் இணைய வேண்டும்.

திருகோணமலை தமிழரின் தலைநகரம். எமது தலைநகரத்தில் ஜே.வி.பியின் நோக்கங்கள், திட்டங்கள் எல்லாம் எமக்குத் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

# சிரமதானப் பணியும் வீட்டு தரிசிப்பு நிகழ்வும்

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலில் கடந்த சனிக்கிழமை மேஜர் மங்கை குடியிருப்பில் சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஐயங்கன்குளம் திலீபன் மருத்துவ சேவையினரும், முதலுதவி அணியினரும் உடனடி அனர்த்தக் குழுவினரும் இணைந்து 65 வீடுகளில் தரிசிப்பை மேற்கொண்டனர்.

இந்த வீட்டுத் தரிசிப்பில் தமிழீழ சுகாதார சேவைகளின் மல்லாவிப் பிரதேசப் பொறுப்பாளர் யாழினியன், ஐயங்கன்குள திலீபன் மருத்துவ சேவை நிறுவனப் பொறுப்பாளர் கரிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வீட்டுத் தரிசிப்பின்போது மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சையில் 117 நோயாளர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்தனர். (கு)

# மக்கள் கட்டுமான பயிற்சி முல்லைத்தீவில் ஆரம்பம்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - கற்சிலைமடு கிராம மக்களுக்கான மக்கள் கட்டுமானப் பயிற்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை 6 மணிக்கு ஒட்டுசுட்டான் கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் துளசிகன் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

பொதுச்சுடரை கற்சிலைமடு பாடசாலை பிரதி முதல்வர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை கற்சிலைமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனை போராளி ஈழவாணி ஏற்றினார்.

தொடர்ந்து மாணவர்களுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு சிறப்புரையை ஒட்டுசுட்டான் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் நிகழ்த்தினார். (கு)

# மருத்துவவசதியின்றி பொதுமக்கள் அவதி!

கிளிநொச்சி—

மன்னார் தேத்தாவடிக் கிராம மக்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சுமார் பத்து கிலோமீற்றர் தூரம் சென்று பள்ளமடு அல்லது முழங்காவில் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியுள்ளது.

இந்தக் கிராமத்தில் சுமார் ஐம்பது குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்கு சாதாரண நோய்கள் என்றாலும், பலமைல் தூரமே செல்ல வேண்டியுள்ளது.

இங்கு மீளக்குடியேறி ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை ஆரம்ப சுகாதார சிகிச்சை கூட வழங்கப்படவில்லையென அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே, இது தொடர்பாக உரியவர்கள் கவனமெடுத்து, மருத்துவ வசதியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு)

# அம்புலன்ஸ் பற்றாக்குறை நோயாளர் பெரும் சிரமம்!

கிளிநொச்சி—

மன்னார் - பள்ளமடு அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் பற்றாக்குறையாக உள்ளதால், நோயாளர்கள் பெரும் அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் நீண்ட காலமாக ஒரு அம்புலன்ஸே உள்ளது. இந்த அம்புலன்ஸில் மேலதிக சிகிச்சை பெறுவதற்காக ஏனைய வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களைக் கொண்டு செல்லும் போது, ஏனைய நோயாளர்கள் அந்த அம்புலன்ஸ் வந்தபின்னரே செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதனால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

# வடமராட்சி கிழக்கு பகுதியில் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டல்

ஆழியவளை—

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு ஆழியவளை மக்களுக்கான நிரந்தர வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆழியவளை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஜெயபாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அடிக்கல்லை கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கெனடி, அன்ரன், ஜெகன் ஆகியோர் நாட்டினர்.

கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 350 வீடுகள் இந்தப் பகுதியில் அமைக்கப்படவுள்ளன. (கு)

# வேலைத்திட்டங்கள் குறித்து கூட்டம்!

மன்னார்—

யுனிசெப் நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் கடந்த திங்கட்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யுனிசெப் நிறுவனத்தைச் சேர்ந்த டேவிட் கெட்ஒப்சோன், திட்ட அலுவலர்களான வெடஸ்ரோ, ஜானக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டு மன்னார் மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனம் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சிறுவர் நலன் பேண் திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. (மோ)

# கரும்புலிகள் நாள் கலந்துரையாடல்!

கிளிநொச்சி—

கரும்புலிகள் நாளை சிறப்பாகக் கடைப்பிடிப்பதற்கான கருத்தரங்கொன்று புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் போசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், கிராம அலுவலர்கள், வணிகர் கழக தலைவர்கள், மகளிர் அமைப்பு பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆகியோர் கலந்துகொண்ட நிகழ்வில் கருத்துரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நிகழ்த்தினார்.

சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் நிகழ்த்தினார்.

இதில் கரும்புலிகள் நாள் நிகழ்வு தொடர்பான வேலைத்திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (கு)

# அக்கராயன் பிரதேச பெண்களுக்கான கிராமிய கட்டுமானப் பயிற்சி நிறைவு!

கிளிநொச்சி—

கிளிநொச்சி - அக்கராயன் பிரதேச பெண்களுக்கான கிராமியப் படைக்கட்டுமானப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அக்கராயன் பிரதேசத்துக்குட்பட்ட அக்கராயன், ஆனைவிழுந்தான், வன்னேரி வலயங்களைச் சேர்ந்த பெண்கள் இந்தப் பயிற்சி நிகழ்வில் பங்கேற்றனர்.

கந்தபுரம் டானியல் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு அக்கராயன் மகா வித்தியாலய ஆசிரியை திருமதி. ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரை அக்கராயன் பிரதேச சிறப்பு வேலைத்திட்டப் பொறுப்பாளர் கானகன், அக்கராயன் வன்னேரி சிறப்பு வேலைத்திட்டப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சிறீமாறன் ஏற்றினார்.

சிறப்புரையை அரசியல்துறையைச் சேர்ந்த தமிழ்மறவன் நிகழ்த்தினார்.

இறுதியாக பயிற்சியை நிறைவு செய்த இரண்டாயிரம் பெண்களுக்கும் பயிற்சி நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# மன்னாரில் கைக்குண்டு வீச்சு; பொலிஸார் ஒருவர் படுகாயம்!

மன்னார்—

மன்னாரில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

மன்னார் நகரின் மத்திய பகுதியில் தொலைத் தொடர்பகம் அருகே பொலிஸாரின் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களால் இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் விதானகே (வயது 40) என்ற பொலிஸார் திருப்பிச் சுட்டதில் தொலைத் தொடர்பகம் முன்பாக பலசரக்குக் கடை நடத்தி வந்த எஸ்.திருச்செல்வம் (வயது 52) மற்றும் அவரது மனைவி மரியநாயகி (வயது 46) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

10 நிமிட நேரத்துக்கும் மேலாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

காயமடைந்த இருவரும் மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதையடுத்து நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் பனங்கட்டிக்கோடு என்ற இடத்தில் 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (மோ)

# பயிற்சி ஆரம்பம்

கிளிநொச்சி—

கிளிநொச்சியில் மேஜர் துளசி பயிற்சிப் பாசறையின் ஆறாவது அணிக்கான பயிற்சி ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 7.45 மணிக்கு நடைபெற்றது.

மேஜர் துளசியின் திருவுருவப் படத்துக்கு புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து பயிற்சிகளை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆரம்பித்து வைத்தார். சிறப்புரையை தமிழன்பன் நிகழ்த்தினார்.

# கட்டட நிர்மாண பயிற்சி நெறி!

கிளிநொச்சி—

நேர்ப் நிறுவன நிதிப்படுத்தலுடன் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் பனங்காமம் பொதுநோக்கு மண்டபத்தில் கட்டட நிர்மாணப் பயிற்சிநெறி கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நிறுவனத்தின் தலைவர் குணசிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

இந்தப் பயிற்சிநெறிக்கான பெயர்ப் பலகையை நிறுவன ஆலோசகர் குஷால் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை நிறுவன தலைமை இணைப்பாளர் க.ஜெயசீலன் நிகழ்த்தினார்.

இந்தப் பயிற்சிநெறியில் 25 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

- திருக்குறள்

## நமது நோக்கு

# பொருத்தமான உபகாரம்?

இரண்டு ராடர் கருவிகளை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது இந்தியா. இந்தியாவின் இந்த முடிவு ஈழத்தமிழருக்கு மட்டுமன்றி தமிழகத்திலுள்ள ஈழத்தமிழர் ஆதரவு சக்திகளுக்கும் கூட பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கைக்கு எந்தவொரு இராணுவ உதவிகளையும் வழங்கத் தயாரில்லை என்று கூறி வந்த இந்தியா - திடீரென்று தனது நாட்டுத் தயாரிப்பான 'இந்திரா' ரக ராடரை வழங்கியிருக்கிறது.

இந்தியாவின் இந்த முடிவு ஈழத் தமிழரின் நலனுக்கு எதிரானது என்றே பொதுவானதொரு கருத்து நிலவுகிறது. இராணுவ உதவிகள் எதையும் இலங்கைக்கு வழங்கவில்லை என்று முடிவு செய்த இந்தியா- இந்த ராடர்களை இராணுவ உதவியாகக் கருதாமல் விட்டது ஏன் என்று புரியவில்லை.

இந்தியா வழங்கிய இந்த ராடர்களின் மூலம்- இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்பதைவிட, இந்திய உதவி தமிழர்களுக்குக் கிடைக்காது என்ற ஆத்மார்த்தமான உணர்வு சிங்களப் பேரின்வாத சக்திகளுக்கு ஏற்படும்.

ஈழத் தமிழர்கள் மிகமோசமாகப் படுகொலை செய்யப்பட்டுவரும் நிலையிலும் - போர் ஒன்று தமிழர் தரப்பின் மீது திணிக்கப்படும் சூழல் உருவாகியுள்ள நிலையிலும் இந்தியாவின் இந்த முடிவு இலங்கை அரசை மேலும் உற்சாகப்படுத்தும்.

அதைவிட தமிழினப் படுகொலைகளை இந்தியா கைகட்டிப் பார்த்திருக்கும் என்ற உறுதி இலங்கை அரசிடம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

அதுவே, எதிர்காலத்தில் இலங்கையில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்படுவதற்கு வழிகோலும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவ ரீதியற்ற உதவிகளை வழங்குவது என்ற பெயரில் இந்தியா நடந்து கொண்டிருப்பது - நிச்சயம் ஈழத்தமிழ் மக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேவேளை, இத்தகைய இராணுவ உதவி குறித்து இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழகக் கட்சிகள் வலுவானதொரு தளத்தில் இருப்பதால் - இத்தகைய உதவிகளை இலங்கைக்கு கிடைக்கவிடாமல் செய்ய முடியும்.

இதுவரை இலங்கை அரசுக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்கக் கூடாது என்பதில் தமிழகக் கட்சிகள் உறுதியான நிலைப்பாட்டைத் தான் வெளிப்படுத்தி வந்திருக்கின்றன.

அந்த வகையில் - இனிவரும் காலத்திலாவது இந்திய அரசு இத்தகைய இராணுவ உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்காமல் பார்க்க வேண்டிய பொறுப்பு தமிழகக் கட்சிகளைச் சாரும்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி - மன்மோகன் சிங் அரசால் எதுவும் செய்ய முடியாது என்ற அசையாத நிலைப்பாடு உருவாக்க வேண்டிய தருணம் இது.

தமிழகக் கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய அரசின் இந்த இராணுவ உதவிகளைத் தடுக்காது விடின், ஈழத் தமிழர் படுகொலைகளை எதிர்காலத்தில் தடுத்துவிட முடியாத நிலை ஏற்படும்.

ஈழத் தமிழருக்கென தமிழகக் கட்சிகள் இப்போது செய்யக்கூடிய உபகாரமாக - இந்தியாவின் இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்கவிடாமல் செய்வதாகவே இருக்கும்.

தீர்க்கமான இந்தத் தருணத்தில் தமிழகக் கட்சிகள் தமது நகர்வுகளை எடுப்பதும், இந்திய அரசு முடிவுகளை எடுப்பதும்தான் ஈழத் தமிழரின் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# தமிழரை அகதிகளாக்குவதுதான் சிங்களவரை காக்கும் வழிமுறையா?

## இரா.சம்பந்தன் கேள்வி



கொழும்பு —

தமிழர்களை அகதிகளாக்குவதுதான் சிங்களவர்களைப் பாதுகாக்கும் வழிமுறையா? என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதி முயற்சிகளிலிருந்து விலகவில்லை. நோர்வே எழுப்பிய கேள்விகளுக்குத் தான் பதிலளித்துள்ளனர். ஆகையால் அதில் எதுவித சந்தேகமும் இல்லை.

கெப்பிற்றிக்கொல்லாவ சம்பவத்தைப் போல்தான் ஊர்காவற்றுறை, பேசாலை மற்றும் திருமலையில் மாணவர்கள் கொல்லப்பட்டதையும் கருத வேண்டும.

அமைதி முயற்சிகளுக்குச் சாதகமாகவும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அரசாங்கம் நிறுத்தினால் அதே வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுவார்கள்.

பேசாலையில் தேவாலயத்தின் மீது கைக்குண்டை படையினர் வீசியுள்ளனர். கடற்கரையில் சிலரை சுட்டுக் கொன்றுள்ளனர். 50 கண்ணாடியிழைப் படகுகளை எரித்துள்ளனர். இந்தக் கொடூரத்தை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

கடந்த இரு மாதங்களில் வடக்கு-கிழக்கு நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது. இந்தப் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான மக்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். தங்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தங்களது வீடுகளை கைவிட்டுவிட்டு இவர்கள் அகதிகளாகச் சென்று விட்டனர்.

இந்தப் பிரதேசங்களிலுள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடிவதில்லை. பொதுமக்கள் தொழிற் செயற்பாடுகளை மேற்கொள்ள முடிவதில்லை. சுனாமி அனர்த்த மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை அனுமதித்திருந்தீர்கள் எனில் மறுசீரமைப்பும், புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

சுனாமி அனர்த்த மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பைத் தடுத்த சக்திகள் தான் இப்போதைய நிலைமைகளுக்கு அனைத்துப் பொறுப்பும். இந்தச் சக்திகள் அரசாங்கத்தில் இருப்பது கவலையளிக்கிறது.

அமைதி முயற்சிகளுக்கு ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் தடையாக இருக்கின்றன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து விட்டு சிங்களவரைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதுகிறீர்களா?

தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டு அவர்களைத் தங்களது வீடுகளிலிருந்து முகாம்களுக்கு இடம் பெயர வைப்பது தான் சிங்களவர்களைப் பாதுகாக்கின்ற வழிமுறையா? இதைத்தான் புத்த மதம் கற்பிக்கிறதா?

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் இந்தியா ஒரு முக்கிய காரணி என்பதில் கேள்வியே தேவையில்லை. இந்தியாவின் பங்களிப்பு என்பது அவசியமானது என்பது உண்மை எனத் தெரிவித்தார்.

# 'நமது ஈழநாடு தினசரிக்கு சபாஷ்'

## வாசகர் நோக்கு

"புகுமுக மாணவர்கள் மீது மோசமான பகிடிவதை" என்னும் செய்தியை 26.06.2006 அன்று துணிச்சலுடன் முன்பக்கத்தில் வெளியிட்டு யாழ்.குடாநாட்டு கல்வித்துறை சார்ந்தவர்களிடம் பரபரப்பை உண்டு பண்ணியது "நமது ஈழநாடு".

தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் மிகவும் அநாகரிகமான முறையில் சில பல்கலை சிரேஷ்ட மாணவர்கள் ராகிங் மேற்கொள்வது கொடூரமானது.

அதிலும் குறிப்பாகப் பெண்களிடம் இவ்வாறு நடந்து கொண்டது குறித்து பல்கலைக்கழக சமூகமே வெட்கித்தலை குனிய வேண்டும். அடக்குமுறைக்குள் வாழும் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பல்கலைக்கழகச் சமூகம் இது குறித்து துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான ஒழுக்கப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

அந்த வகையில் "நமது ஈழநாடு" துணிச்சலுடன் மேற்படி சம்பவம் பற்றிய விபரங்களைச் சாட்சியங்களுடன் வெளியிட்டது. குறித்த பத்திரிகையின் சமூக அக்கறையையும், துணிச்சலையுமே வெளிப்படுத்துகிறது.

"நமது ஈழநாடு" தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களைச் சமூகத்துக்கு வெளிச்சம் போட்டுக்காட்ட வேண்டும் என்பதே வாசகர்களதும், சமூக நலன் விரும்பிகளதும் எதிர்பார்ப்பாகும். *"நமது ஈழநாடு" பத்திரிகைக்கு ஒரு சபாஷ்.*

*இங்ஙனம்,*
*பாதிக்கப்பட்ட புகுமுக மாணவன்,*

# கிராம பாதுகாப்பு படைக்கு மேலும் பத்தாயிரம் பேர் சேர்ப்பு

கொழும்பு —

சிங்கள எல்லையோரக் கிராமங்களை பாதுகாக்க கிராமப் பாதுகாப்புப் படைக்கு மேலும் 10 ஆயிரம் பேரைத் திரட்ட பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே 25 ஆயிரம் பேர் வரையில் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும், மேலும் சிங்கள எல்லையோரக் கிராமங்களைப் பாதுகாக்க 10 ஆயிரம் பேரை இணைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கிராம பாதுகாப்பு படையின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இவர்களுக்கான பயிற்சிகள் இரு வாரங்கள் வழங்கப்படுமெனவும், இவர்கள் மூலம் எல்லையோரக் கிராமங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் மற்றும் தாக்குதல்களை முறியடிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆன்மீக சஞ்சிகை வெளியீடு!

யாழ்ப்பாணம் —

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை ஆனி மாத இதழ் நாளை முற்பகல் 10.30 மணியளவில் பேரவைத் தலைவர் அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் - சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஆசிரியர் ச.நவரத்தினராசா வேல், மதிப்பீட்டுரையை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# ஜயந்த தனபாலவின் ஐ.நா செயலர் பதவியை தமிழ் மக்கள்தான் தடுத்து நிறுத்த வேண்டும்



ஐக்கிய நாடுகள் சபை என்பது இன்று உலகில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம். உலக நாடுகளில் அமைதியையும், உறுதித்தன்மையையும் ஏற்படுவதற்காக இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் உருவாக்கப் பட்ட அமைப்பு.

இந்த அமைப்பு அதன் நிரந்தர உறுப்பு நாடுகளின் வீட்டோ (Veto) அதிகாரத்தால் முழுமையாக ஒரு தன்னிச்சையாக இயங்கும் அமைப்பாக இல்லாதிருப்பினும் உலகின் சிறிய நாடுகளின் அரசியல், பொருளாதார பிரச்சினைகளில் ஒரு முக்கிய பங்கு வகிக்கக் கூடியதாகவே உள்ளது.

தற்போதைய செயலாளர் நாயகம் கோபி அனானின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. எனவே, புதிய செயலாளரைத் தெரிவு செய்யும் பணி ஆரம்பித்துவிட்டது. இதில் போட்டியிடும் போட்டியாளர்களுக்கான தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறும்.

சிறிய நாடுகள் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றவும், பெரிய நாடுகள் தங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் நாட்டை நியமிக்கவும் ஆர்வம் கொண்டு அலைகின்றன. பொதுவாக இந்தப் பதவிக்கு நடுத்தர (வல்லரசுகள், பிராந்திய வல்ரைசுகள் அல்லாதவை) அல்லது சிறிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளையே நியமிப்பது வழக்கம்.

ஐ.நா. சபை தோன்றிய 1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிட்டனின் பிரதிநிதி - பதில் செயலாளர் நாயகமாக ஆறு மாதங்கள் பதவி வகித்தார். அதன் பின்னர் சிறிய மற்றும் நடுத்தர பலமுள்ள நாடுகளே பதவி வகித்து வருகின்றன.

இந்தப் பதவிக்கு வருபவர்கள் அதன் உறுப்புரிமை நாடுகளின் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். பொதுச் சபையால் பிரதிநிதி பிரேரிக்கப்பட்டாலும் இறுதி முடிவை பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகளே எடுக்கும். தமது விருப்புக்கு மாறானவர்கள் வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டால், நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தின் மூலம் அவர்களை நிறுத்த முடியும்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் (Boutros Boutros - Ghali) இரண்டாம் தவணைப் பதவி நீடிப்பை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் 1996 ஆம் ஆண்டில் இரத்துச் செய்ததை இங்கு குறிப்பிடலாம். தெற்கு லெபனானில் இருந்த பலஸ்தீன அகதிமுகாம்கள் மீது - இஸ்ரேலின் விமானங்கள் குண்டு வீசியதை இவர் கடுமையாக கண்டனம் செய்திருந்தார். எனவே, அமெரிக்காவால் பதவியிலிருந்து துரத்தப்பட்டார்.

பொதுவாக இந்தப் பதவிக்கு உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் சுழற்சி முறையில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது இயல்பு.

1946 - நோர்வே (மேற்கு ஐரோப்பா)
1953 - சுவீடன் (மேற்கு ஐரோப்பா)
1961 - மியான்மார் (கிழக்கு ஆசியா)
1971 - ஒஸ்ரியா (லத்தீன் அமெரிக்கா)
1981 - பெரு (லத்தீன் அமெரிக்கா)
1991 - எகிப்து (வடகிழக்கு ஆபிரிக்கா)
1996 - கானா (மேற்கு ஆபிரிக்கா)

கடந்த 35 வருடங்களாக ஆசியப் பிராந்தியத்திலிருந்து பிரதிநிதிகள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. உலகில் 60 வீத மக்கள் தொகையையும், 30 வீத நிலப்பரப்பையும் கொண்ட ஆசியப் பிராந்தியத்திலிருந்தே இந்த முறை தெரிவு இடம் பெற வேண்டும் என சீனாவும், மேலும் பல ஆசிய நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த சிங்கள அரசு - மிக வேகமாக தனது பிரதிநிதியாக ஜயந்த தனபாலவை நிறுத்தியுள்ளது. பொதுவாக ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கு பிரேரிக்கப்படுபவர்கள் ஒரு சட்ட நிபுணராக அல்லது இராஜதந்திரியாக பணியாற்றி இருக்க வேண்டியதுடன் உலக , உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் ஜனநாயக, சமூக சபைப் பணிகளை ஆற்றி இருத்தல் வேண்டும்.

ஜயந்த தனபால 1998 - 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐ.நாவின் ஆயுதக்களைவு பணியகத்தில் கடமையாற்றி இருந்தார். எனவே, இவருக்கு உலக அளவில் உள்ள அறிமுகத்தைப் பயன்படுத்தி ஐ.நாவின் தலைமைப் பொறுப்பில் புகுத்திவிட சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது. அதனால் தான் 2004 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து 2005 ஆம் ஆண்டு கார்த்திகை வரையில் சமாதானப் பேச்சுக்களில் சமாதான செயலகப் பணிப்பாளராக இவரை அரசு நியமித்தது.

ஆனால், இவர் சமாதான செயலகப் பணிப்பாளராக இருந்த காலப்பகுதியில்தான் சமாதான முயற்சிகள் முறிந்து போகத் தொடங்கின. அது மட்டுமல்லாது இராணுவத்தினதும், துணை ஆயுதக் குழுக்களினதும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளும் அதிகரித்தன.

ஒரு சிறிய தீவில் அமைதியை ஏற்படுத்த முடியாத இவர், எப்படி உலகில் அமைதியைக் கொண்டு வருவார்? சிங்கள அரசைப் பொறுத்தவரை உலக அரசியல் குறித்தோ அல்லது தனது பிராந்திய நலன்கள் குறித்தோ எந்த அக்கறையும் கொண்டது கிடையாது. ஒரே கொள்கை இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதும், குடும்ப அரசியலை புகுத்துவதும் தான்.

அமெரிக்காவும் ஜயந்த தனபாலவை பதவியில் அமர்த்துவதையே மறைமுகமாக ஊக்குவிக்கின்றது. ஏனெனில், அமெரிக்கா அதனால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர், ஐ.நாவின் அனுமதியின்றி ஈராக் மீது தொடுக்கப்பட்ட போர், குவான்ரனாமோ குடா சிறையில் நடக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் என உலகில் பெருமளவான எதிர்ப்பை சம்பாதித்துள்ளது.



எனவே, ஐ.நா செயலாளர் பதவியிலும் முரண்டு பிடித்து உலகின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் ஏற்படுத்திக் கொள்ள அது விரும்பவில்லை. ஆசிய நாட்டில் தனக்கு மிகவும் விசுவாசமான, தனது பிடிக்குள் வைத்திருக்கக் கூடிய, ஆசியப் பிராந்திய நாடுகளையே ஏமாற்றக் கூடிய ஒரு நாட்டை ஐ.நா செயலாளர் பதவிக்குக் கொண்டு வருவதே அதன் விருப்பம். மேற்கூறப்பட்ட எல்லாத் தகுதிகளும் உடைய நாடான சிங்கள தேசம் அமெரிக்காவின் தெரிவாகியது.

சிங்கள அரசு - சீனா, பாகிஸ்தான், இந்தியா, யப்பான் என ஆசியாவின் பெரிய நாடுகளை தன்வசப்படுத்தி ஆதரவைத் திரட்டும் வல்லமையுள்ளது. அப்படிப் பெரிய ஆசிய நாடுகள் ஆதரவு வழங்கின் சிறிய ஆசிய நாடுகள் பெரும்பாலும் அதை எதிர்க்க மாட்டாது. என்பது தான் அமெரிக்காவின் கணக்கு. சீனா, தாய்லாந்து நாட்டின் பிரதிநிதியை ஆதரித்தாலும் இலங்கை தெரிவு செய்யப்பட்டால் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தாது. ஏனெனில் சிங்கள அரசுக்கும், சீனாவுக்கும் அப்படி ஒரு நல்ல உறவு உள்ளது.

இதன் வெளிப்பாடாகவே அமெரிக்காவின் இலங்கை தொடர்பான அண்மைக்கால அறிக்கைகள், செயற்பாடுகள் அமைந்துள்ளன. தற்போது விடுதலைப்புலிகளின் பெயரை சுட்டிக் காட்டி கண்டனம் வெளியிடும் ஒரு நாடு அமெரிக்கா மட்டும்தான். கனேடிய, ஐரோப்பிய ஒன்றியத் தடைகளை தூண்டியதும் அமெரிக்காவே. குற்றுயிராகக் கிடக்கும் சிங்கள இராணுவத்தை பலமுள்ள படையென புகழ்ந்ததும் அமெரிக்கா தான். இதன் மூலம் சிங்களத்தை தன்பக்கம் இழுப்பதுடன், ஒரு கொழுந்துவிட்டு எரியும் இனப்பிரச்சினை உள்ள வரை சிங்கள அரசு அமெரிக்காவின் காலடியிலேயே கிடக்கும் என்பதும் அதன் கணிப்பு.

ஆனால், ஐ.நா செயலாளர் நாயகம் பதவிக்கான தேர்தல் முடியும் வரை போர் ஏற்படாமலும், சிங்கள அரசு அதிக மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமலும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் அமெரிக்காவுக்கு உள்ளது. இவை சிங்கள அரசின் தெரிவைப் பாதிக்கலாம்.

ஏனெனில், ஒரு பயங்கரவாத நாடு எப்படி "ஐ.நா தலைமைப் பொறுப் பில் இருக்க முடியும்? சுருக்கமாக கூறின் ஒரு ஆசிய நாட்டைக் கொண்டு ஆசிய நாடுகளின் தலையில் குட்டுவைக்க அமெரிக்கா முனைந்துள்ளது என்றால் மிகையாகாது."

ஆனால், இந்தியா விழித்துக் கொண்டுள்ளது. அது தனது பிரதிநிதியாக தரூர் (Tharoor) என்பவரை தேர்தலில் நிறுத்தியுள்ளது. இலங்கை தனது பிரதிநிதிக்கு ஆதரவு கேட்டு வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவை கடந்த மாதம் இந்தியாவுக்கு அனுப்பியிருந்தது.

ஆனால், இந்தியா அதைக் கருத்தில் எடுப்பதாக மங்கள சமரவீரவிடம் கூறிவிட்டு, அதிரடியாக கடந்த வாரம் இந்த முடிவை எடுத்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் சிங்கள அரசை தோற்கடிப்பதேயாகும், எப்படி? இந்தியா எது செய்தாலும் அதற்கு போட்டியாக பாகிஸ்தான் செய்வது வழமை.

உதாரணமாக இந்தியா ஒரு ஏவுகணையை ஏவினால் உடனடியாக பாகிஸ்தானும் புதியதோ, பழையதோ, வெடிக்குமோ, வெடிக்காதோ ஒரு ஏவு கணையை நிச்சயமாக ஏவும். அவர் களின் அரசியல் அடித்தளம் அப்படி. எனவே, பாகிஸ்தானும் ஒரு பிரதிநிதியை விரைவில் நிறுத்தும்.

வெளிவந்த தகவல்களின் படி நபீர் சடிக்கை நிறுத்த பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. மொத்தத்தில் இந்தியாவினதும், பாகிஸ்தானி னதும் ஆதரவு சிங்கள அரசுக்கு கிட்டப் போவதில்லை. மேலும் சீனா, தாய்லாந்துப் பிரதிநிதியை ஆதரிப்பதால், இலங்கையை ஆதரிக்காது. அதாவது ஆசியப் பிராந்திய நாடுகளின் ஆதரவு சிதறலடைந்து விடும்.

இந்தியாவைப் பெறுத்தவரையில் தற்போதைய நிலையில் இலங்கையும், பாகிஸ்தானும் ஒன்றுதான். அதாவது சிங்கள அரசினது அமெரிக்க சார்புக் கொள்கை, தனது பிராந்திய நலன்களை மதிக்காத தன்மை என்பன இந்தியாவை மிகவும் கடுப்படைய வைத்துள்ளது.


பொதுவாகச் சிங்கள தேசம் இந்தியாவின் நட்பு நாடு கிடையாது என்பதே உண்மை. 1984 ஆம் ஆண்டில் சென்னை நகரில் இருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டுக்கு குண்டு வீசி பயங்கரவாத நடவடிக்கையை மேற்கொண்டதும் சிங்கள அரசு தான். அதன் பின் ராஜிவ் காந்தியை துப்பாக் கியால் தாக்கியது, எண்ணுக்கணக்கற்ற அப்பாவித் தமிழக மீனவர்களை படுகொலை செய்தது என இந்தியாவுக்கு எதிரான அதன் பயங்கரவாதப் பட்டியல் மிக நீளம்.

1995 ஆம் ஆண்டில் ஜயந்த தனபாலவால் தயாரிக்கப்பட்ட ஐ.நாவின் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதக்களைவு அறிக்கையும் இந்தியாவின் நலன்களை வெகுவாகப் பாதித்திருந்தது.

ஜயந்த தனபால பதவிக்கு வந்தால், இந்தியாவுக்கு மிகுந்த ஆபத்தாகவே முடியும் என்பது அதற்கு நன்கு தெரியும். எனவே தான் இந்தியா இத்தகைய ஒரு முடிவை எடுத்தது. எனினும் சிங்கள அரசுமீது இதைவிட ஒரு கடுமையான நடவடிக்கைதேவை என்பதுடன் இலங்கைத் தீவில் இரு அரசுகள் இருப்பது தான் இந்து சமுத்திர பிராந்தியத்தில் உறுதியை நிலைநாட்ட உதவும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜயந்த தனபாலவை ஐ.நா பதவிக்கு வரவிடுவது தமிழீழத்தில் உள்ள அப்பாவி பொது மக்களுக்கு மிகப் பெரும் அழிவையே ஏற்படுத்தும். இவர் சமாதான செயலகப் பணிப்பாளராக இருந்த போது தான் கருணாகுழு தோற்றம் பெற்றது, தமிழ் மக்கள் மீதான படுகொலைகளும், மனிதஉரிமை மீறல்களும் அதிகரித்தன.

இன்று உலக மனித உரிமை அமைப்புக்களாலும், மன்னிப்புச் சபையாலும், கண் காணிப்புக் குழுவாலும், ஐரோப்பிய ஒன்றியத்தாலும், இணைத்தலைமை நாடுகளாலும் கூட தமிழ் மக்களின் படுகொலைகளில் சிங்கள அரசுக்கும் அதன்



இராணுவத்துக்கும் பங்கு உண்டு எனக் கூறப்பட்ட பின்பும், எப்படி சிங்கள அரச பிரதிநிதி ஐ.நா செயலாளராக முடியும்? தமிழர் பகுதிகளில் பச்சிளம் குழந் தைகளையும், அப்பாவிப் பொதுமக்களையும் வயது வேறுபாடின்றிப் படுகொலை செய்யும் நாட்டின் பிரதிநிதி இவர் என்பதை உலகம் மறந்தது எப்படி?

இவர் பதவிக்கு வந்தால் என்ன நிகழும்? சிங்கள இராணுவம் கொல்லும் தமிழ் மக்களையும் - புலிகள் கொன்றதாக அறிக்கை விடுவார், அதை அமெரிக்கா வழிமொழியும். ஏனைய நாடுகள் கண்களை மூடிக் கொண்டு தலையாட்டும். சுருக்கமாகச் சொன்னால் ஐ.நா ஆதரவுடன் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை தொடரும்.

அமெரிக்காவின் தாக்குதல் எல்லைகள் ஈரான், வடகொரியா என விரிவடையும். 1962 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் செயலாளராக இருந்த மியன்மார் நாட்டைச் சேர்ந்த தானற் கியூபா நாட்டில் இருந்த சோவியத்தின் ஏவுகணைகளை அமெரிக்காவின் துணையுடன் ஐ.நா என்ற போர்வையில் தந்திரமாக அகற்றியது போல இந்தியாவின் நீண்ட தூர ஏவுகணைகளுக்கும் ஆப்பு வைக்கப்படும்.

எனவே, ஜயந்த தனபாலவின் ஐ.நா செயலாளர் பதவிக்கான முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டிய கடப்பாடு இந்தியாவுக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கும் உண்டு. அதிலும் குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்கள் தான் அதிக அழுத்தங்களை ஐ.நா அமைப்பின் பிரதிநிதிகள் மீதும், சிங்கள அரசை ஆதரிக்கும் நாடுகள் மீதும் கொடுக்க வேண்டும். அதாவது சிங்கள அரசு ஒரு பயங்கரவாத அரசு என்பதைச் சர்வதேசத்துக்கு உரத்துச் சொல்வதுடன் ஜயந்த தனபால ஒரு சிங்கள அரச பயங்கரவாதி எனவும் இனங்காட்டப்பட வேண்டும். *

**வேல்ஸிலிருந்து~அருஸ்**

(நன்றி - இணையத்தளம்)

# இலங்கைக்கு ராடர் உதவி வீரமணி கடும் கண்டனம்!



இந்தியா—

இலங்கைக்கான இந்திய இராணுவ உதவியைத் தடுக்கக்கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு கடிதங்களை அனுப்புமாறு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கை ஜனாதிபதிக்கு அறிவுரைகூறும் வகையிலும், இந்தியாவின் நிலைப்பாடு, நடுநிலை, சமரச மனப்பான்மைதான் என்று காட்டும் வகையிலும் பேச்சுவார்த்தைகள் மூலம் இந்த நீண்டநாள் சிக்கலை இருதரப்பும் அணுகவேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியதை நாம் வரவேற்கிறோம்.

இதுவரை பிரதமர் அளவில் இந்தப் பிரச்சினை குறித்து யாரும் வாய் திறக்காத நிலையில் - நமது பிரதமர் முதன் முதலில் இலங்கை அரசுக்கு மிகவும் தைக்கும் வகையில் அரசியல் தீர்வு காணவேண்டிய இந்தப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கைகளால் தீர்த்து விடமுடியாது என்று கூறியிருந்தார்.

அங்கே உள்ள சிங்கள இராணுவத்தை ஜனாதிபதி ராஜபக்ஷ தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளாரா? அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் அவர் இருக்கிறாரா? என்பது எளிதில் காணமுடியாத சூழ்நிலையே அரசியல் நோக்கர்களுக்கு அங்குள்ளது.

தமிழர்கள்மீது, ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொண்டே அங்குள்ள இராணுவம் இருமுனைத் தாக்குதலை மறுபுறம் நடத்துகிறது. ஒரு முனையில் இராணுவத்தினரின் குண்டுவீச்சு (தேவாலயம் என்ற சர்ச்சுக்களில் நுழைந்த மக்கள்மீதும் குண்டு வீச்சு) மற்றொரு முனையில் கருணா என்ற விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு துரோகக் கும்பலுக்கு ஆயுத உதவி வழங்குவது உட்பட எல்லாம் செய்து அவர்களை விட்டும் தாக்குதலை தொடரச்செய்யும்போது ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக் கேடயமான விடுதலைப்புலிகள் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்க இயலாததுதானே.

இராணுவ நடவடிக்கைகளால் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காணமுடியாது என்று பிரதமர் கூறிடும் நிலையில், இலங்கை அரசுக்கு ராடர் போன்ற இராணுவத்துக்கு உதவக் கூடிய பல கருவிகளை அனுப்பும் செயல் அப்பட்டமான தமிழர் விரோத நடவடிக்கை அல்லவா?

இருதரப்புகள் போர்நிறுத்தத்தை மீறும் நிலையில், ஒரு தரப்புக்கு இராணுவ உதவி செய்வது என்பது எவ்வகையில் நியாயமாகும்? எனவே, இலங்கைக்கு இராணுவ உதவி செய்வதை உடனே நிறுத்தவேண்டும்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமன்றி உலகத்தமிழர்களின் உணர்வுளை நாம் ஒட்டுமொத்தமாகப் பிரதிபலித்து இதைக் கூறுகிறோம். தமிழக அரசும், முதல்வரும் மத்திய அரசுக்கு இதனை வற்புறுத்தவேண்டும்.

இதனை வலியுறுத்தி தமிழர் அமைப்புகளும், கழகக் கிளைகளும் பிரதமருக்கு ஏராளமான தந்திகள், தொலைப்பதிவு செய்திகளை அனுப்ப வேண்டுகிறோம் என்று வீரமணி கூறியுள்ளார்.

## அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம்—

கரவெட்டி அத்துழு குடிநீர் விநியோக சுத்திகரிப்பு இயந்திர அங்குரார்ப்பண வைபவமும், கரவெட்டி பிரதேச வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதமவிருந்தினராக யாழ்.அரசஅதிபர் கே. கணேஷ், சிறப்பு விருந்தினராக தேசநிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், கௌரவ விருந்தினர்களாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை முகாமையாளர் ரி.பாரதிதாசன், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்—

தெல்லிப்பழை - மகாஜனாக் கல்லூரியில் சேவையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் நடராசா காளிதாசனுக்கு சேவை நலன்பாராட்டு விழா இன்று காலை 9மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

## திருகோணமலை மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

திருகோணமலை—

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகத்தை இராணுவ மயமாக்குவதைக் கண்டித்து திருமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. திருமலை தமிழ் எழுச்சிப் பேரவை சார்பில் இந்த முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு ஆளுனராக ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் மொஹான் விஜே விக்கிரம, அரச அதிபராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் றஞ்சித் சில்வாவும் நியமிக்கப்பட்டனர்.

சிவில் நிர்வாகத்தை இராணுவ மயமாக்கும் நோக்கில் அரசாங்கம் இந்த நியமனங்களை மேற்கொண்டது.

வடக்கு - கிழக்கில் அரச படைகளால் தமிழ்மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டுவரும் நிலையில் இத்தகைய இராணுவ மயமாக்கல் மேலும் பாரிய ஆபத்துக்களை உருவாக்கும்.

ஆகையால், இந்த நியமனங்களைக் கண்டித்து நேற்று பூரண ஹர்த்தால் நடத்தப்பட்டது. திருமலை நகரசபை, வடக்கு - கிழக்கு மாகாண சபை, உள்ளூர், மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் வங்கிக் கிளைகள், பாடசாலைகள், கடைகள் மற்றும் சந்தைகள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தன.

திருமலையில் பேரூந்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. வீதிகளில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

## தம்புள்ள பொருளாதார நிலையம் தாக்குதலுக்கு இலக்காகும் ஆபத்து

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு—

தம்புள்ள விசேட பொருளாதார மத்திய நிலையம் விடுதலைப் புலிகளின் இலக்காக உள்ளதால் அவதானமாக இருக்குமாறு மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி வர்த்தகர்களை அறிவுறுத்தியுள்ளார்.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் நடைபெற்ற வர்த்தகர்களுக்கான மாநாட்டிலேயே வெர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் விடுதலைப் புலிகளிடம் உள்ளது. அதற்கமைய தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் குறித்து மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் பாதுகாப்பு செயற்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படும்.

எனவே வர்த்தகர்கள் விழிப்புடன் இருந்து பொருளாதார மத்திய நிலையத்தை பாதுகாக்க வேண்டும்.

பொருளாதார மத்திய நிலையத்தில் பாதுகாப்புக் குழுவையும் வர்த்தகர்கள் அமைக்க வேண்டும்.

கலேவெல, தம்புள்ள மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் நடமாடுவது குறித்து கண்டறியப்பட்டுள்ளது.

எனவே தற்போதைய நெருக்கடியான சூழலில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (தே)

## மாணவர்களுக்கான அறிவித்தல்

தெல்லிப்பளை—

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 2006 ஆம் ஆண்டு க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் தரம் 11 மாணவர்களும், மாகாணமட்டப் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 9 மாணவர்களும் விண்ணப்பம் அனுப்புவது தொடர்பாக இ.நவகேதீஸ்வரன் புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம் (சுன்னாகம் கொமர்ஷல் வங்கி அருகாமை) நாளைக்குள் தவறாது சமூகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம்—

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தான விய வருட திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

9 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், 11 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும், 12 ஆம் திகதி வைரவர் பொங்கலும் நடைபெறவுள்ளது.

## 6 வயது சிறுவன் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்—

அளவெட்டியில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஆறுவயது சிறுவன் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் - அளவெட்டியைச் சேர்ந்த இராஜேஸ்வரன் றஜீபன்(வயது 6) என்னும் சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்:- நேற்று நண்பகல் மேற்படி சிறுவன் விதியால் சென்று; கொண்டிருக்கையில் ஹையேஸ் வான் ஒன்றினால் மோதுண்டு படுகாயமடைந்ததாகத் தெரியவருகிறது.

## இளம் குடும்பஸ்தர் மீசாலையில் கைது

யாழ்ப்பாணம்—

தென்மராட்சியில் வீட்டில் வைத்து இளம்குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டதாக அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில், அல்லாரை தெற்கு மீசாலையைச் சேர்ந்த கணேசமூர்த்தி ஜெகரூபன் (வயது 23) என்பவரே காணாமற் போயுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்:-

மேற்படி இளம் குடும்பஸ்தர் புத்தூர் சந்தி மீசாலையிலுள்ள அவரது மனைவி வீட்டில் இருந்த போது நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் இவரைக் கைதுசெய்து கொண்டு சென்றதாக நேரில் கண்ட அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணை நடத்தியபோது மீசாலையைச் சேர்ந்த மற்றொரு இளைஞருடன் இவரும் படையினரால் கைதுசெய்யப்பட்டதாக தெரிய வந்துள்ளது. கைதான மற்ற இளைஞர் குறித்து தமக்கு எந்தவித முறைப்பாடும் தெரிவிக்கவில்லையென ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

## சுற்றிவளைப்பு தேடுதல்

யாழ்ப்பாணம்—

வடமராட்சியில் நேற்று பல்வேறு பகுதிகளில் படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் வீடு வீடாகச்சென்று சோதனை மேற்கொண்டதுடன் அங்கிருந்தவர்களையும் விசாரணை செய்ததாக தெரியவருகிறது.

கலிகை, கலட்டி, கற்கோவளம் முள்ளி போன்ற பகுதிகளிலேயே படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது. சுற்றிவளைப்பு தேடுதலின்போது பெண் சிப்பாய்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள இளைஞர்கள்,யுவதிகள் படையினரால் புகைப்படம் பிடிக்கப்பட்டதால் கிராம மக்களிடையே பெரும் பதற்றம் நிலவியதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பெயரில் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (12)

## 400 குண்டு துளைக்காத ஆடைகளை உடன் கொள்வனவு செய்ய உத்தரவு!

கொழும்பு—

முக்கிய பிரமுகர்கள் மற்றும் அவர்களது பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்புக்காக 400 குண்டு துளைக்காத ஆடைத் தொகுதியை உடனடியாக கொள்வனவு செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ பொலிஸ் வழங்கல் பகுதியை கோரியுள்ளார்.

இந்த 400 குண்டு துளைக்காத ஆடைத் தொகுதிகளை விலைக்கு பெற்றுக்கொள்வதற்கு தற்போது கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தற்கொலைதாரிகளால் முக்கிய பிரமுகர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை அடுத்து இந்த ஆடைத் தொகுதிகளை விலைக்குப் பெறுக்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு இவ்வளவு தொகையான ஆடைத் தொகுதிகள் வாங்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு!

நெடுந்தீவு—

சமூக உதவியல் திட்டத்தின் கீழ் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நெடுந்தீவில் உள்ள இரு பாடசாலைகளுக்கு வியைாட்டு உபகரணங்கள் வழங்கியுள்ளன.

நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி, சிக்கிரியாம்பள்ளம் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு நெடுந்தீவு செஞ்சிலுவைச்சங்க கிளையூடாக உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பவற்றுக்கான கம்பங்களே வழங்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே இதற்கான உபகணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மார்கழி மாதம் வரைக்கும் இப்பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)


### மகாதேவ ஆச்சிரமம் குருபூசை

மகாதேவ ஆச்சிரம ஸ்தாபகரும் குரு மகாசந்நிதானமுமான தவத்திரு வடிவேல் சுவாமிகளின் 16ஆவது குருபூசை தினம் எதிர்வரும் 29.06.2006 வியாழக்கிழமை சுவாமிகளின் சமாதிக் கோயில் மூல மூர்த்தியான படிகலிங்கேஸ்வரருக்கு ஸ்நபன விசேட அபிசேகம் ஆராதனைகளுடன் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும். விசேட நற்சிந்தனை ஓதுதல், கூன்பாண்டியனை நோக்கி ஞானசம்பந்தர் பாடிய பதிகம் இடம்பெறும். "பையவே சென்று பாண்டியற்காகவே" என்னும் தலைப்பின் கீழ் தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் அருளுரையாற்றுவார்.

**சொற்பொழிவு:**

1. க. பிரகாஷ், தவத்திரு வடிவேல் சுவாமிகள் (மகாதேவ ஆச்சிரமம்)
2. செல்வி. இ. கோபிகா "குருபக்தி" (மகளிர் ஆச்சிரமம்)
3. செல்வன் தி. ஸ்ரீரஜீவன் "ஈழத்து ஞானிகள்" (கிளி/இந்துக் கல்லூரி)

**பகல் 12 மணிக்கு மகேஸ்வரபூசை நடைபெறும். அத்தருணம் அன்பர்கள், அடியார்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.**

சாந்தி

ஜெயந்த் நகர் கிளிநொச்சி.


இப்படிக்கு
மகாதேவ ஆச்சிரம தலைவரும், நிர்வாகமும்.

[C/4479]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் மன்னிப்பு கோரவில்லை வருத்தம் மட்டும் தெரிவித்தனர்

## என்கிறார் அமைச்சர் கெகலிய



கொழும்பு—

ராஜீவ் காந்தி கொலைக்காக புலிகள் மன்னிப்புக் கோரவில்லை. அவர்கள் வருத்தம் மட்டுமே தெரிவித்துள்ளதாக - வியாக்கியானம் கொடுத்திருக்கிறார் அரசாங்க பாதுகாப்புப் பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பேசிய கெகலிய ரம்புக்வெல -

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அளித்த நேர்காணலைப் பார்த்தேன். அதில் விடுதலைப் புலிகள் மன்னிப்பு ஏதும் கோரவில்லை.

ராஜீவ் கொலைச் சம்பவத்துக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர். 2002ஆம் ஆண்டிலிருந்து இது விடயத்தில் ஒரே நிலைப்பாட்டைத்தான் விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர்.

முதலில் ராஜீவ் கொலைக்கு அவர்கள் பெறுப்பேற்று இந்திய அரசாங்கம் மற்றும் மக்களிடத்தில் மன்னிப்புக் கோரவேண்டும்.

இத்தகைய ஆழ்ந்த வருத்தம் தெரிவிப்பது அர்த்தமற்றது. 15 ஆண்டுகளுக்குப் பின்னராவது அவர்கள் அதைச் செய்தார்கள் என்று கூற வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. அமைதி முயற்சிகளுக்கு முழு ஆதரவளித்துள்ளது என ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

## மோட்டார் திணைக்களத்தில் குண்டுப் புரளியால் பரபரப்பு

கொழும்பு —

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் குண்டு வைத்திருப்பதாகக் கிடைத்த தொலைபேசி அழைப்பை அடுத்து அங்கு பதற்ற நிலை தோன்றியது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும், அது வெடிக்கப் போவதாகவும் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் அநாமதேய தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. இதனால் அங்கு சில மணி நேரம் தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்ததுடன் ஊழியர்கள் சிலர் அந்த இடத்தை விட்டு வெளியேறினர். சம்பவ இடத்துக்கு வந்த குண்டு செயலிழக்கும் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தியபோதும் அங்கு சந்தேகத்துக்கிடமான பொருட்கள் எதனையும் கைப்பற்றவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக - சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குண்டு இருப்பதாக வதந்தியைப் பரப்புவோரை கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பருத்தித்துறையில் சுடப்பட்டவர் அம்பாறையைச் சேர்ந்தவர்

யாழ்ப்பாணம்—

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அம்பாறை – ஒலுவில் என்ற இடத்தைச் சேர்ந்த கனகரத்தினம் யோகராசா (வயது38) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் கற்கோவளம் பகுதியில் தற்காலிகமாக வசித்துவந்ததாகவும், லொறிச் சாரதியாக கடமையாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரி கல் வயல் கிராம அலுவலர் பிரிவில் வசித்துவந்தபோது, கடந்த டிசம்பர் மாதம் சாவகச்சேரி நகரில் வைத்து இவரது மனைவி படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

இதையடுத்து, கற்கோவளம் பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்த இவர் - இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும் தெரியவருகிறது. இவரது சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஊர்காவலர் படுகாயம்!

கொழும்பு—

அனுராதபுரம் மாவட்டம் பதவியா பகுதியில் பொலிஸார் மீது நேற்றிரவு நடத்தப்பட்ட தாக்குதலில் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

சமாதி மாவத்த பொலிஸ் நிலையில் பணியாற்றும் பொலிஸார் நேற்றிரவு 8.30 மணியளவில் ரோந்து சென்று கொண்டிருந்தபோது தங்கியாவத்த என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## 9 மாணவர்கள் கைது!

கொழும்பு—

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஒன்பது மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பொலிஸார் அனுமதி கோரியதையடுத்து நீதிமன்றம் விளக்கமறியல் உத்தரவு வழங்கியது.

இந்த மாணவர்கள் 9பேரும் வடபகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

## யுனிசெப் குழுவினர் புலிகளுடன் சந்திப்பு!

கிளிநொச்சி—

விடுதலைப் புலிகளின் சிறார் பாதுகாப்புச் சபையினரை ஐக்கிய நாடுகள் சிறார் பாதுகாப்பு அமைப்பான யுனிசெப் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் – சிறார் படைசேர்ப்புத் தொடர்பாகவும், விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட வயது குறைந்தோருக்கான கல்வி மற்றும் தொழிற்பயிற்சி குறித்தும் ஆராயப்பட்டது. சிறார் நலன் குறித்து அறிவிக்கப்படாத அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் விடுதலைப் புலிகள் விபரித்தனர்.

இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரான கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் சிறார் கடத்தல் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

யுனிசெப்பின் அலுவலகப் பொறுப்பாளர் பென்னி ப்ரூனே, கொழும்பு அதிகாரி வில்லியம் கோல்லி, கிளிநொச்சி அதிகாரி ஸ்டினா கார்லஸ்ன் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி. புலித்தேவன், ஐ.நா. மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன், விடுதலைப் புலிகளின் சிறார் பாதுகாப்புச் சபை ஆலோசகர் கலாநிதி என். மாலதி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## மூன்று வர்த்தகர்களை காணவில்லை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாகரையில் 3 வர்த்தகர்களை கடந்த மூன்று நாட்களாகக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாகரைக்கு குளிர்பானங்களை ஏற்றிக் கொண்டு லொறியில் (எண் 48-1272) சென்றபோதே ஓட்டமாவடியைச் சேர்ந்த சேகு லெப்பை இப்ராகிம் (வயது 22), பொலநறுவை மின்னேரியாவைச் சேர்ந்த இந்திகா (வயது 24), பொலநறுவையைச் சேர்ந்த பிரசன்னா (வயது 27) ஆகியோரே காணாமற்போயுள்ளனர்.

இதுதொடர்பாக, வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## தலைவரானார் மகிந்த

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு தெரிவு செய்யப்பட்டார்.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோதே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

நேற்றிரவு 11.30 மணியளவில் சுதந்திரக்கட்சியின் தலைவராக இவர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

## அநாமதேய தொலைபேசிகள்; பொலிஸார் தீவிர விசாரணை!

கொழும்பு—

மக்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் வகையில் அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் ஊடாக வதந்திகள் பரப்புவோரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பெர்லிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து கொழும்புப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர கருத்துத் தெரிவிக்கையில்–

அநாமதேய தொலைபேசி அழைப்புக்களை கண்டுபிடிப்பதற்காக தொலைத் தொடர்பு நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

பாடசாலைகள் மற்றும் ஏனைய பொது இடங்களுக்கு தொலைபேசியூடாக அச்சுறுத்தல் வருகின்றபோது மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோரும் அச்சமடைகின்றனர். வதந்திகளை நம்புவதன் மூலம் நாளாந்தச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

தற்போது நாடு குழப்பமான ஒரு நிலையை அடைந்திருக்கிறது. இந்த நிலையில் இத்தகைய வதந்திகள் மக்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

பாடசாலை மாணவர்களும் சரி, மக்களாக இருந்தாலும் சரி அடையாளம் தெரியாத நபர்களால் வழங்கப்படுகின்ற எந்தவொரு பொருட்களையும் பெற்றுக் கொள்ளவேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கற்பிட்டிக் கடலில்...

கொண்டிருந்த கடற்புலிகளின் படகு ஒன்றின் மீது தமிழீழ கடல் இறைமையையும், போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறும் வகையில் - நீரூந்து விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுக் காலை 11.25 மணியளவில் ஆரம்பித்த இந்த மோதல் தொடர்ந்து சுமார் 55 நிமிட நேரம் வரை நீடித்தது.

இந்தத் தாக்குதலை நடத்த வந்த கடற்படையின் நீரூந்து விசைப் படகு ஒன்று சேதமாக்கப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த ஏழு கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

இதன் போது கடற்புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ஏனைய கடற்படைப் படகுகள் பலத்த சேதமடைந்த மற்றைய படகு ஒன்றையும் இழுத்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து பின்வாங்கிச் சென்றன.

இந்த மாதத்தில் கடற்படையினர் தமிழீழ கடற்பரப்பில் போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தும் பாரிய மோதல்களை ஏற்படுத்துவது இத்தோடு மூன்றாவது முறையாகும்.

இந்தக் கடற்சமரின் போது தமிழீழ கடற்படைப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். 2ஆம் லெப். செங்கண்ணன் (யோகலிங்கம் கிரிதரன், யாழ். மாவட்டம்) என்ற போராளியே வீரச்சாவடைந்தார். மேலும் இரு போராளிகள் காயமடைந்தனர்.

அதேவேளை - இந்தத் தாக்குதல் குறித்து தகவல் வெளியிட்ட கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க தகவல் வெளியிடுகையில் -

கடற்படையினரின் எஸ்.எல்.என்.எஸ். விஜய தளத்தைத் தாக்குவதற்காக - தற்கொலைத் தாக்குதல் படகு உட்பட 20 படகுகளில் கடற்புலிகள் கற்பிட்டிக் கடல் நீரேரியில் பிரவேசித்தனர்.

கடற்படையின் ஆறு கரையோர ரோந்துப் படகுகள் கடற்புலிகளின் படகுகளை வழிமறித்துத் தாக்குதல் நடத்தின. இதன்போது கடற்படைப் படகு ஒன்று மூழ்கியதுடன், கடற் புலிகளின் இரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. மூழ்கடிக்கப்பட்ட படகுகள் ஒவ்வொன்றிலும் சுமார் 6 புலிகள் இருந்தனர். கடற்படைப் படகில் இருந்த 5 படையினர் கொல்லப்பட்டதுடன் 3 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த மோதலையடுத்து விமானப் படையின் எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிகளும், அதிவேக தாக்குதல் படகும் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டு புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. கடற்படைத் தளத்தைத் தாக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

பத்தலகுண்டுப் பகுதியிலிருந்து வந்த புலிகளின் படகுகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டன எனத் தெரிவித்தார்.

இதேவேளை - இரண்டு கடற்படைப் படகுகளைச் சூழ்ந்து கொண்டு கடற்படையின் 10 படகுகள் தாக்குதல் நடத்தியதாகவும் -

இதன்போது - 7 கடற்படையினரைக் காணவில்லை என்றும் கடற்படைப் பேச்சாளரை மேற்கோள் காட்டி டொச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

## மூன்று...

அவர்கள் மீது பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

கேகாலை - புவத்கெவிட்டியவைச் சேர்ந்த சின்னையா மகேஸ் வசந்தகுமார் (வயது 26), மயிலம்பாவெளி விபுலானந்தபுரத்தைச் சேர்ந்த நவரட்ணம் அருணசிறி (வயது 22) மற்றும் விபுலானந்தபுரத்தில் தற்காலிகமாக வசித்து வந்த முத்துக்குமர குருபரன் கிருஸ்ணகுமார்(வயது 21) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட அனைவருமே கட்டடத் தொழிலாளிகளாகப் பணியாற்றியவர்கள்.

புல்லுமலை பகுதியிலிருந்து அகதிகளாக வந்த இவர்கள் மயிலம்பாவெளியில் அண்மையில் குடியேறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குண்டுப்....

மாணவர்களை பெற்றோர் வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். இந்தக் குண்டுப் புரளியால் தென்பகுதி மக்கள் பெரும் பீதியுடன் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பரமியின்...

இல்லையென்பதால் அந்தக் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர்.

இந்த நாட்டுக்காக உயிரைக் கொடுத்த பரமி குலதுங்கவுக்கு இப்படியா அவமரியாதை செய்வார்கள் என்றும் அந்தக் குடும்பத்தினர் கேள்வி எழுப்பியதாக கொழும்பு பத்திரிகை தெரிவித்தது.

எம்மிடம்
மொபிற்ரல் G.S.M 350/-
மொபிற்ரல் G.S.M 1000/-
மொபிற்ரல் G.S.M சிம் காட்
HAPPY MOBILEE
ஹப்பி மொபையில்
எல்லா வகையான மொபிற்ரல் காட்டுகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(கொள்வனவுக்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்)
(யாழ். மாவட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்) பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel.&Fax No.:021 2263287, 0777 745394

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.